உ

தமிழ்த்தாய் வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு.

பிரபவ ஆண்டு.

(1927—28.)

மூன்றும் துணர்.

பொழிற்றொண்டர்,

திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்.

திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.

III

உ

வேண்டுகோள்.

நமது பொழிலின் மூன்றும் துணர், எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இன்று நிறைவுற்றது: சென்ற ஆண்டின் இறுதியிலே வெளிவந்து விடுமென எண்ணியதும், எண்ணியாங்கு இயன்றவரை முயன்றதும் திருவருட்செயலின் வழிப்பட்டனவாயின. என்றாலும், நமது பொழிலன்பர்கள், வழக்கம்போல் இத்தாழ்வினையும் பொருள் செய்யாது, பொறுமையுற்றிருந்ததற்கு நமது மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிலின் வெளியீடுகள் தாழ்த்து வெளிவருவதற்குரியவை, 1. போதிய அளவு கட்டுரைகள் வேண்டும்காலத் தின்மை, 2. பொழில் வெளியீட்டிற்கென்றே முழுநேரமும் செலவிடத்தக்க தொண்டரின்மை எனும் இவைகளேயாகும்.

சென்ற ஆண்டில் பேரறிஞர்கள் சிலரால் இதழாசிரியர் கழகம் ஒன்று அமைந்திருப்பதும், பொழிற்றொண்டருள் ஒருவராகக் கற்றுவல்ல பேரறிஞர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள் வந்திருப்பதும் முதற்குறையைப் பெரிதும் நீக்கிவந்தன. இவ்வாண்டில் அக்குறைக்கே யிடனின்றி, இன்னும் பலவாய கட்டுரைகளை விரைவாக எழுதிவர, அன்னோர் யாரும் புனைந்திருக்கின்றனர் அன்றியும், பொழிற்றொண்டிற் கென்றே ஒரு பண்டிதரை எற்படுத்திக் கொள்ளச் சங்கம் ஒப்பம் தந்துளது. தக்க பண்டிதர் ஒருவர் விரைவில் அமைக்கப் பெறுவார். எனவே, மேற்கூறிய குறைகளிரண்டும் இவ்வாண்டில் எய்துதற்கிடனில்லை என்பது ஒருதலை.

பொழிலின் வருவாய், பொழில் நிகழ்ச்சிக்கும் போதிய தன்றாயிருக்கவும், தமிழ்வளர்ச்சியொன்றே கருதிச் சங்கம் புரிந்து வரும் இந்நற்றொண்டை, பொழிலன்பர்கள் கைவிடாது போற்றி வர மிக வேண்டுகின்றோம். மேலும், நமது பொழிலன்பர்கள் தங்கள் தங்கள் அன்பர்களையும் இந்நன்முயற்சியில் சேர்த்துக் கொண்டு பொழிலைப்புரந்துவரவும் வேண்டுகின்றோம்.

நமது பொழிலின் தாழ்ச்சியினைப் பொருள் செய்யாது மாற்றிதழ்கள் அனுப்பிவரும் இதழாசிரியர்கட்கெல்லாம் நமது மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கத்தினையும் தெரிவிக்கின்றோம்.

கூடியவிரைவில் வெளிவரும் நான்காந்துணர் முதன் மலரின் வி. பி. பி. அஞ்சலை அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ள, ஆண்டு உறுப்பினராகிய பொழிலன்பர்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

இங்ஙனம்,

R. வேங்கடாசலம்,

பொழிற்றொண்டன்.

கட்டுரை எழுதிய திருவாளர்களும் கட்டுரைகளும்.

L. உலகநாத பிள்ளையவர்கள்.
இராசராசன், 1, 41, 121, 321.
வாசுகியம்மையார், 35.
பரமோபதேசம், 74.
முருகன் சிறுவிளையாடல், 88, 164, 452.

அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்.
இன்பப்பேறு. 9, 337.
உயிர்ப்பண்புகளும் வீட்டுவாயில்களும். 438.

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்.
சிந்தாமணியின் சுந்தர ஒளிகள், 19.
கல்வி, 137.

பண்டிதர், அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்.
வெஞ்சமாக்கூடலூர், 27, 179.
செங்கீரைப்பருவம், 230.
ஒரு கல்வெட்டு, 431.

T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்.
முதலாங் குலோத்துங்க சோழன், 57, 146.
சுந்தரமூர்த்திகளது காலம், 201.

இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள்.
குமரகுருபரஅடிகளும் அவர் நூல்களும், 81.

K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், B.A.
திருத்தக்கதேவர், 100.
பண்டைத்தமிழர் அரசியல்நிலை, 263.

R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்.
சிலப்பதிகார நாடகப்பகுதி, 107.
துயரங்கள், 335.
புகழேந்தி-ஒட்டக்கூத்தர், 457.

ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்.
அறிவு, 185.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.
புத்த நிர்வாணகாலம், 210.
சிலப்பதிகாரக்காலம், 216.
மணிமேகலை, 410.

உலக ஊழியர் அவர்கள்.
திருவருள் இயல்புகூறி நெஞ்சறிவுறுத்தல், 222.
ஓவியமும் தமிழரும், 418.

ஊ. சா. வேங்கடராமைய்யர் அவர்கள்.
பண்டைத் தமிழரின் சமயம், 239.
ஐயவினைத்தொடர், 247.

சாமி. சிதம்பரனுர் அவர்கள்.
தமிழர் வீரம், 248.

V. சண்முகம் செட்டியாரவர்கள்.
புகழ், 280.
தமிழர் கல்விசைப் புலமை, 348.

சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.
உடல் இயலும் உடல்நலவழியும், 299, 369.

கி. அரங்கராசன் அவர்கள்.
திருச்சுழியல் வெண்பா அந்தாதி, 316, 356.

சி. வேதாசலம் பிள்ளையவர்கள், B. A., B. L.
அண்ணமலைப் பல்கலைக்கழகம், 332.

S. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L.
தமிழக நிலைமையும் தமிழர் கடமையும், 448.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.



" தந்நலங் கருதாப் பொதுநலத் தொண்டர்,
தமிழ்ப்புல வோர்கள் தம்பெருந் தோழர்,
எண்ணில் சிறார்க்குக் கண்ணருள் அன்னையர்,
உடல்பொருள் உயிரெலாம் உரிமை யாக்கித்
தமிழ்த்தொண் டியற்றும் சங்கத் தலைவர்"

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, B.A., B.L., அவர்கள்.

வாழி பல்லூழி.

Roll-126
1285
2385
— 1 —
1-126

உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் : ரு.	பிரபவ – சித்திரை.	மலர் : க.

இராசராசன் I.

பண்டிதர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

முன்னுரை

" தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே-மண்ணாவதுஞ்சோழ மண்டலமே" என்னும் ஆன்றோர் கட்டுரைக்கிணங்க, வான்பொய்ப்பினும் தான்பொய்த்திடாத வரத்தினையுடைய பொன்னி நன்னதி இடையறாது ஒழுகலின், வித்திய ஒன்று பத்து நூறாக விளையும் வளத்திற் சிறந்த நீர்நாட்டினை, இமய முதற் குமரியின்காறும் ஆணைசெல்ல, செங்கோல் ஓச்சிய சோழர்கள், படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டிருந்த பழந் தமிழ்க்குடியினர் என்பது முன்னோர்களின் கொள்கையாகும். அவர்கள், வரலாற்றுக் காலத்தினர், அதற்கு முற்பட்டிருந்தவர் என்றிருவகைப்படுவர். அவருள், முன்னிருந்தாரை ஒழித்துப், பின்னிருந்தவருள் தொன்மையுற்றவன் கரிகாற்பெருவளத்தான் என்பது வாலாற்று ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை. இவ்வளவனையடுத்து, புறநானூற்றினை யுள்ளிட்ட சங்கநூல்களினும், பிறவற்றினும் சோழர்பலர் கூறப்பட்டிருப்பினும்,

அன்னவர் வரலாறு இன்னதென அறிவதற்கேற்ற கருவிகள் கிடைத்திலாமையின், அவர்களைப்பற்றி ஆராய்வதற் கியலாதாயிற்று. ஆயினும், அரசியலார் கல்வெட்டாராய்ச்சியாளரின் ஆண்டு அறிக்கைகளால், கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு தொட்டுச் சோழர் வரலாறு இருள் சிறிது நீங்கி ஒளிருதல் மகிழத்தக்கது. பெரும்பான்மையும், அவ்வறிக்கைகளையும், கல்வெட்டுக்களையும், சிறுபான்மை ஏனையவற்றையும் துணையாகக் கொண்டு, ஆராய்வதற்கு ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டவன் முதலாவது இராசராசன் ஆவான். இவனுக்கு முன்னர் இராசராசன் என்னும் பெயருடையார் இல்லாமையானும், இப்பெயருடையவர் பலர் பின்னர்க் கேட்கப்படுவதானும், இவனே அவருள் முன்னவனெனக் கொள்வது சால்புடைத்தாயிற்று. இவன் அரும்பெருஞ் செய்கைபல செய்த பெருஞ்சோழனெனினும், இவனைப்பற்றி ஆராய்வதன்முன், இன்னவனது முன்னோரைப்பற்றிச் சிறிது சொல்லாதொழியின், இவனது பெருந்தகைமையும் பிறவும் இனிது விளங்காவாகலின், அவர்களைப் பற்றிச் சுருங்கக் கூறுவேன்.

இராசராசன் முன்னோர்கள்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பல்லவர்கள் வடமேற்கு நாடுகளின் வழியாக இடை இந்தியாவிற் புகுந்து, மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆந்திரர்களை வென்று, காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு மேலான நிலைமையில் இருக்கையில், பம்பாய் இராசதானியிலுள்ள பாதாமியைத் தனக்கு அரசிருக்கையாகக்கொண்டு மிக்க உயரிய நிலையிலிருந்த சளுக்கமன்னன், இரண்டாம் புலிகேசி என்பவன், தன் நாட்டை நெடுந்தூரமளவும் பெருக்கிப் பல்லவரைக் காஞ்சியினின்றும் வெளிவராவண்ணம் அடக்கினன். அதனல், இருவருக்கும் அடிக்கடி சண்டையும் சச்சரவும் மிகுந்திட, நாடு இரண்டுபட, நகரமுழுவதும் குழப்பம் உண்டாயிற்று. அப்பொழுது காலங்கருதியிருந்த சோழன் விசயாலயன் என்பவன், ஒரு சிறு படையுடன் திடீரென வந்து

விசயாலய சோழன் கி-பி. 830

தஞ்சைநகரை எளிதிற்கைப்பற்றி, அதனைத் தன் தலைநகராகக் கொண்டு செங்கோலோச்சினான். சோழர் தலைநகர் உறையூர் என்பதொழிந்து, இவன் காலந்தொட்டுத் தஞ்சைநகரமாயிற்று.

தஞ்சையைத் தலைநகராகக்கொண்ட சோழர்களில் இவனே முதலவனாவான். * இவனைப் பரகேசரிவர்மன் விசயாலய சோழ தேவன் என்பார். †

ஆதித்தன் I

விசயாலயனுக்குப்பின் அவன் மகன் இராசகேசரிவர்மன் ஆதித்தன் I அரியணை ஏறினான். அந்நாளையில், தொண்டை நாட்டின் தலைநகராகிய காஞ்சியில், பல்லவர் மிக்க சீர்குலைந்த நிலையில் ஆட்சிசெய்திருந்தனர். அதனை அறிந்த ஆதித்தன், சேரமான் தாணுரவி என்பவனோடு நட்புக் கொண்டு தொண்டைநாட்டின் மீது படையெடுத்துச் சென்றனன். அங்கிருந்த பல்லவர் தலைவன் அபாரசிதவர்மன் என்னும் நிருபதுங்கன், கங்கர் குலத்தரசன் முதற்பிருதிவிபதியைத் துணைகொண்டு எதிர்த்தும் தோல்வியுற்றனன். கி-பி. மூன்றாம் நூற்றாண்டுதொட்டுப் பல்லவர்களின் ஆட்சியின் கீழிருந்த தொண்டைநாடு இதுமுதல் சோழரது ஆணைக்கடங்கியதாயிற்று. இப்போர்முனையில் வீரத்துடன் போர்புரிந்தவன் படைத்தலைவன் விக்கியண்ணன் என்பவன். அவனது வீரச்செய்கையை மெச்சிய ஆதித்தனும், சேரமானும், சிம்மாசனம், ஈச்சோப்பி, பல்லக்கு, முரசு, களிற்றுப்படை முதலியவற்றை அவனுக்குப் பரிசளித்ததன்றிச் செம்பியன் தமிழவேள் என்னும் பட்டமும் அளித்தனர். தொண்டைநாடேயன்றிக் கொங்குநாடும் சின்னாளில் ஆதித்தன் கைவசமாயிற்று. இவன், வடவாற்காட்டில் காளத்திக்கருகிலுள்ள தொண்டைமானாற்றூரில் இறந்தமையின், இவனைத் தொண்டைமானாற்றூர்த் துஞ்சினதேவன் என்பர்.

ஆதித்தன் I 880-907

---

*. *Tiruvalangadu plates.*

†. *Ep. Annual Report No. 665. Public 28th July 1910. S. I. I. vol. III Part III page 221.*

ஆதித்தன் இறந்தபின்னர் அவன் மகன் பராந்தகன் I பரகேசரி என்னும் பட்டத்துடன் அரியணை ஏறினன். அவன் வாணர்களை வெல்லக்கருதி அன்னவர் நாடாகிய வாணகப் பாடியை நோக்கிச்செல்வானுயினன். வாணகப்பாடி என்பது பாலாற்றுக்கு வடக்கே வடவாற்காட்டினைத் தன்னுள்ளடக்கிய இடம் என்பர். இதனை வடுகவழிமேற்கு எனவும் கூறுப. இங்கு வாணர்க்கரசன் வித்தியாதரன் அரசு செய்திருந்தனன். இவன் தன் மகன் விசயாதித்தனோடு வந்து போர்புரியவும், பராந்தகன் வீரருட் சிறந்த வீரனாதலின், இவ்விருவரையும் வென்று இவர்கள் நாட்டினைக் கைக்கொண்டு, இப்போரில் தனக்குத் துணையாக இருந்த கங்கர்குலத் தரசன் இரண்டாம் பிருதிவி பதிக்கு அதனையளித்துச் செம்பியன் மாவலிவாணராயன் எனப் பட்டஞ்சூட்டி, அவனைத் தன்கீழ்ச் சிற்றரசனாக்கினன்.

பராந்தகன் I
907-953

இவ்வாறு வாணர்களை வென்றடக்கியபின் பராந்தகன், பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்றனன். பாண்டிநாட்டிற்குத் தலைநகராகிய மதுரையில் இராசசிம்ம பாண்டியன் செங்கோல் செலுத்தியிருந்தான். அவன் எதிர்த்து நிற்க வாற்றாது புறந்தந்தோடிட, மதுரை பராந்தகன் கைவசமாயிற்று. இதனால் மதுரைகொண்ட பரகேசரியானன் பராந்தகன்.

மதுரை
கொண்டது
909-910

புறந்தந்தோடிய இராசசிம்மன், இலங்கைமன்னன் ஐந்தாம் காசிபனைத் துணைவேண்டினன். அதற்கிணங்கி அவன், யானைப் படை குதிரைப்படைகளுடன் சிறந்த வீரர்களடங்கிய பெரிய தானையைத் தன் சாமந்தன்வசமனுப்ப, அது பாண்டியநாட்டினை அடைந்தது. அதைக்கண்டு பெருமகிழ்வுற்ற பாண்டியன், "இனி இவ்வுலகமுழுவதையும் என் குடைக்கீழ் ஆக்குவேன்" எனக் கூறித் தன்படையுடன் சிங்களவர் தானையும் ஒருங்குகூடிப் பராந்தகன்மீது செல்லுமாறு அனுப்பினன். வேளூர் என்னும் இடத்தில் கடும்போர் நடந்தது. இப்போர்க்களத்தில் பாண்டிப்படையும் சிங்களப்படையும் முற்றிலும் முறியடிக்கப்பட்டன. பாண்டியனும் அச்சுற்று மதுரையை விடுத்து இலங்கையைப் புகலிடமாக அடைந்தனன்.

பாண்டியனோடு
இரண்டாம்
போர்
918-919

சிங்கள அரசனது துணைவலியே; பாண்டியர்கள் பன்முறையும் உண்டுபண்ணும் இடர்ப்பாட்டிற்குக் காரணமாகும் என்றறிந்த பராந்தகன், இத்தகைய துன்பங்கட்கு ஏதுவாயிருப்பதை அடியோடு ஒழிப்பதே தக்கதெனக் கருதி, மிக்க சீற்றத்துடன் கடலைக் கடந்துபோய் இலங்கையை முற்றுகைசெய்து, எதிர்த்து வந்த சிங்களவூரை எல்லாம் தன் வாட்படைக்கு இரையாக்கி, அன்னவர் மனைவியர் அழுத கண்ணீரால் தனது சினத்தீ சிறிது தணியப்பெற்றுத் தன் நகரை அடைந்தனன். கடலைக்கடந்து இலங்கையில் இராமனைப்போல் போர்புரிந்தமையின், இவனுக்குச் சங்கிராமராகவன் என்னும் பெயர் உளதாயிற்று. இவ்வாறு இவன் மதுரையையும், இலங்கையாகிய ஈழத்தையும் வென்று கொண்டமையின், 'மதுரையும் ஈழமுங்கொண்ட பரகேசரிவர்மன்' என இவனை வழங்கத்தொடங்கினர். இவனுக்குச் சோழகுலப்பெருமானார், வீரசோழன், வீரநாராயணன் என்னும் பெயர்களும் இருந்தன. சமரகேசரி, விக்கிரமசிங்கன், குஞ்சரமல்லன், சோழசிகாமணி, சூரசிகாமணி என்ற விருதுப்பெயர்களும் இவற்குண்டு. இவன் படைத்தலைவன் சிறுகுளத்தூர் செம்பியன் சோழியவரையன் என்பவன். அவன் நல்லூரில் நடந்தபோரில் சீட்புலி என்பவனைக்கொன்று ஊரையும் பாழ்படுத்தினான்.

இலங்கைமீது படையெடுப்பு

உடையபிராட்டியார் கோக்கிழானடிகளும், வில்லவன் மாதேவடிகளும் இவன் மனைவியராவார். இவனுக்கு, இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என மக்கள் மூவர் இருந்தனர்.

இவனது இருபத்தொன்பதாவது ஆண்டினதாய கோலார் சாசனத்தும் பிறவற்றினும், கொங்குநாட்டுப் பராந்தகபுரம், கொங்குப்பெருவழி பராந்தகபுரம் எனக் காணப்படுதலின், கொங்குநாடும் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தமை விளங்கும்.

இவ்வண்ணம் பற்பல நாடுகளையும் கைக்கொண்டு, எங்கும் புகழ்பரப்பிக் கொங்கிற் பொன்கொண்டு புலியூர்ச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து நாட்டை நலமுற நாற்பத்தாறு யாண்டுகளும் ஆட்சி புரிந்தனன்.

தெற்கே, கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள சுசீந்திரத்தும், வடக்கே, காளத்தியிலும், மேற்கே, கருவூருக்கு அடுத்த சோமூரிலும் இவனது சாசனங்கள் காணப்படுதலின், இவன் காலத்தில் சோழரது ஆட்சி நெடுந்தூரமளவும் பாவியிருந்தமை காண்க.

இப்பராந்தகனது ஆட்சியின் கடைக்காலமாகிய 947-ஆம் யாண்டில், துங்கபத்திரைக்கரையில் அரசுசெய்திருந்த இராட்டிரகூடத்தரசன் மூன்றாங் கிருட்டினனான கன்னரதேவன் என்பவன் படையெடுத்து வந்து சோழநாட்டின் வடவெல்லையிற் குழப்பத்தை உண்டாக்கினான். அப்பொழுது வடவாற்காட்டிலிருந்த இவன் மகன் இராசாதித்தன், ஒரு பெருந் தானையோடு சென்று எதிர்த்திட, ஆர்க்கோணத்திற்கு ஆறு மையிலுக் கப்பாலுள்ள தக்கோலம் என்னும் இடத்தில், இரு பெரும்படையும் கைகலந்து போர்புரிந்தன. கடும்போர் நடக்கையில் கன்னர தேவனது சேனை முறியுண்டது. இனிச் சோழர்க்கே வெற்றியென எவரும் கருதியிருக்கையில், கன்னரதேவன் தங்கை கணவன் இரண்டாம் புதூகன், இராசாதித்தன் ஏறியிருந்த யானையின்மீது விரைவிற் பாய்ந்து, தன் உடைவாளை உருவிக்குத்திட, அவனும் வீழ்ந்திறந்தனன். யானைமேல் வீழ்ந்து துஞ்சினமையின், இராசாதித்தனுக்கு "யானைமேற்றுஞ்சினான்" என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

இராசாதித்தன் 950

G. O. No. 919 Pub. 29 July 1912, Para 14.

இவனுக்குக்கோதண்டராமன் எனவும் பெயருண்டு. இவன் தாயார் உடையபிராட்டியார் கோக்கிழானடிகள்; பட்டத்தரசி ஈராயிரவன் தேவி அம்மனார்.

காளத்திக்கருகிலுள்ள கோதண்டராமேச்சரமும், அரக்கோணத்திற்கு அருகில் கீழைப்பாக்கத்திலுள்ள ஆதித்தேச்சரமும் இவன் எடுப்பித்த ஆலயங்கள் என்பர்.

இவ்வாறு இராசாதித்தன் இறந்துபோக, தொண்டைநாடு கன்னரதேவன் கைவசமாயிற்று. இராசாதித்தன் தம்பி கண்ட

கண்டராதித்தன் 954

ராதித்தன், இராசகேசரிவர்மன் பராந்தகன் கண்டராதித்தன் என்னும் பெயருடன் சோழ நாட்டை ஆளத்தொடங்கினான். இவன் செம்பியன் மாதேவியாரை மணந்து மதுராந்தகன் என்னும் மைந்தனைப் பெற்றுவைத்துக், கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் எனக் காவிரியின் வடகரையில் தன்பெயரால் ஊர் உண்டாக்கி விண்ணுலகடைந்தனன். இவனது படிமத்தைக் கோனேரிராசபுரத்துக்கோயிலுட் காணலாம்.

அரிஞ்சயன்

இவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் அரிஞ்சயன் என்பவன். இவனை அரிந்தமன் எனவும் கூறுவர். இவனைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவன் மகன் பராந்தகன் II.

பராந்தகன் II 954-970

தன் தந்தைக்குப்பிறகு பராந்தகன் II இராசகேசரி என்னும் பட்டத்துடன் சோழநாட்டின் ஆட்சி பெற்றான். 'கலியுகத்தில் வழக்குவீழ்ந்த நீதிகளை மீட்டும் நிலைநிறுத்துதல் காரணமாகப் பண்டைக்காலத்திருந்த மனுவே இன்றுவந் தவதரித்தனன் எனக் குடிகள் கொண்டாடவும், இவன் காலத்தில், பூமாலையைக் குறிக்கும் ஆரம் என்னும் மொழிக்கணுள்ள, 'ஆ' என்ற எழுத்தொலியைக் கேட்பதல்லது, குடிகள் துன்புற்று ஆ என்றலறி ஓலமிட்டு அரற்றிய ஒலியை எங்கும் கேட்டதில்லை எனப் புகழ்ந்துரைக்கவும் செங்கோலோச்சினான்' எனத் திருவாலங்காட்டுச் சாசனம் கூறுநிற்கும். இவன் சேவூர்ப்பறந்தலையில் வீரபாண்டியனோடு கடும்போர் புரிந்து அவனைப்புறந்தந்தோடிக் காட்டில் ஒளித்திடச் செய்தனன் என லீடன் சாசனம் கூறுகின்றது. அதனால் இவற்குப் பாண்டியனைச் சுரம் இறக்கின சுந்தரசோழன் என்னும் பெயர் உண்டாயிற்று. சுந்தரசோழன் என்பது இவன் பெயர்களுள் ஒன்றாகும். இவன் கடவுண்மாட்டுப் பேரன்புடையன் என்பது 'ஆழ்வார் பராந்தகன்' என்னும் சாசனப்பகுதியால் விளங்குகின்றது. இவன் தனது கடைசி காலத்தில் பொன்மாளிகையில் (சிதம்பரத்தில்) தன் மனையாளோடிருந்து காலங்கழித்திருக்கையில், புறந்தந்தோடிச் சுரத்தில் ஒளித்திருந்த வீரபாண்டியன், அற்றநோக்கிவந்து, இவனைக் கொன்றிருத்தலுமையுமென்பது

'சோழன் முடித்தலைகொண்ட வீரபாண்டியன்' என்னும் சாசனப் பகுதிகொண்டு ஊகிக்கின்றனர். இவன் பொன்மாளிகையில் இறந்தமையால், இவற்குப் 'பொன்மாளிகைத் துஞ்சினதேவன்' எனும் பெயருளதாயிற்று. *G. O. No. 920, Pub. 4th August 1914, Para 15.*

இவன் இறந்தபோது இவனது மனைவியார், வானவன் மாதேவியார் உடன்கட்டை எறினர். இதனைத் திருவாலங் காட்டுச் சாசனத்துக்காண்க. அக்காலத்திய வழக்கிற்கிணங்க, இவ்விருவர் படிமங்களையும் இன்னவர் மகள் குந்தவையார் தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்து நிபந்தங்கள் கொடுத்துள்ளதைச் சாசனங்களில் பரக்கக்காணலாம். *S. I. I. Vol. II, Part I, Page 69-70.*

இவனுக்குக் குந்தவை, ஆதித்திய கரிகாலன் II, அருண் மொழித்தேவன் என மக்கள் மூவர் இருந்தனர்.

பராந்தகன் II பொன்மாளிகையிற் றுஞ்சினபின், அவன் மூத்தமகனாகிய ஆதித்திய கரிகாலன் அரியணை எறினன். இவன் தன் தந்தையைக் கொன்றவனைப் பழிக்குப்பழி வாங்கக் கருதியிருந்தவனாதலால், தான் பட்டத் துக்கு வந்த இரண்டாம் ஆண்டிலேயே, வீர பாண்டியனோடு போர்புரிந்து அவன் தலையைக் கொய்து பந்தாக உருட்டி விளையாடியதன்றி, அதனைத் தன் னாட்டில் வெற்றித்தூணாகவும் நாட்டிவைத்தனன். இதனை வீடன் சாசனத்தாலறிக. முதற் பராந்தகனுக்குப்பின் கன்னரதேவன் கைவசப்பட்டிருந்த கச்சி, இவன் காலமுதல் சோழரது ஆணையின் கீழதாயிற்று. இவனை வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரி வர்மன் எனக் கூறுவர். இவனுக்குப்பின் அரசுபுரிந்த மதுராந்த கன் இராசகேசரி எனப் பட்டந்தாங்க வேண்டியிருக்க, அவ்வா றின்றி பரகேசரி எனத் தாங்கியிருந்தமையால், இம்மதுராந்தகன் ஆதித்தனோடு பிரதிநிதியாக உடனிருந்து ஆட்சி செய்தவனாதல் வேண்டு மென்பர்.

ஆதித்திய கரிகாலன் II 970–980

இவ்வாறாக இராசாதித்தன் முதல், ஆதித்தன் II. உள்ளிட்ட சோழர்கள் இருபது யாண்டுகளுக்குள் அரசாண்டொழியவே,

அருண்மொழித்தேவனே அரசாளுதற்குப் பெரிதும் உரிமையுடையவனாக இருந்தான். குடிகள் இவனையே அரசுரிமையைக் கொள்ளவேண்டினர். ஆனால்,இவன், தன் சிற்றப்பன் மதுராந்தகனுக்கு நாடாட்சி செய்வதில் விருப்பமிருப்ப தறிந்து,அவனுக்கு அவ்விருப்பம் ஒழியுமளவும் தனக்கு அரசாட்சி வேண்டியதில்லை என்று மறுத்திட, மதுராந்தகன் முடிசூட்டப்பெற்றான். இம்மதுராந்தகனைப் பரகேசரிவர்மன் மதுராந்தக உத்தமசோழன் எனவும், பரகேசரிவர்மன் கண்டராதித்தன் மதுராந்தக உத்தமசோழன் எனவும் சாசனங்கள் கூறுகின்றன. விழுப்பரையன் மகள் கோக்கிழானடிகள் இவன் மனைவியாவாள்.

மதுராந்தகன்
969-985

(தொடரும்)

இன்பப்பேறு.

திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், தமிழ்ப்புலவர்,
சலகண்டபுரம்.

உலகப்பொருட்களனைத்தும்உயிர்ப்பொருள், உயிரில்பொருள் என இருகூறுபடும். பின்னையது முன்னையதன் வாழ்க்கைக்கின்றியமையாததாகிப் பல்லாற்றானும் உதவுதல் காண்கின்றேமாதலின், உயிர்ப்பொருட்களே உலகிற் றலைசிறந்து விளங்கும் மாண்பினவாம். இனி, அவ்வுயிர்க் குழூஉக்களும் வண்ணம், வடிவு, உறுப்பமைதி யாதிய உடல் இயற்கைப் பண்புகளானும், நடத்தல், பறத்தல், ஊர்தல் முதலிய தொழிற் கூறுகளானும் பற்பல வேறுபாடுடையவேனும், அவற்றின் சிறப்பியல் பாகிய அறிவு, மெய் வாய் கண் மூக்குச் செவி முதலாய ஐவகைப் புலன்களோடும், நினைக்கும் ஆற்றல் வாய்ந்த உள்ளத்தோடும் இயை

புற்று அடைவே முறைபற்றி ஓரறிவு முதல் ஆறறிவுகாறும் பகுப் புற்று ஒன்றினென்றுயர்வனவாகித் தம்மிற்றாழ்ந்தவற்றைத் தாம் விரும்பியவாறுபயன்படுத்துக்கொண்டாளுமாற்றலுமுடையவாய் விளங்கும் முறைமையில், மனிதனே படைப்புப்பொருட்களின் தலைவனென நிற்குந் தகுதி வாய்ந்துள்ளான். பொதுமையில் எல்லாவுயிர்களும் தத்தம் வாழ்க்கைநிலையிற் கண்ணுங்கருத்துங் கொண்டு இயன்றவகையில் முயன்று தொழில் புரிந்துண்டு வாழ்வனவேனும் அவற்றின் உட்கிடையைக் கூர்ந்து நோக்கின், இன்பம் ஒன்றையே குறிக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அயர்ந்து துன்புறுகின்றன வென்னும் உண்மைபுலப்படும்.

மேற்கூறியவாறு உயிர்க் கூட்டங்கள் எத்தனை பிரிவுபடினும் அவற்றின் கருத்தனைத்தும் ஒன்றையே விழைதலின் (அதாவது இன்பத்தையே விரும்பித் துன்பத்தை அறவே வெறுத்தலின்) உயர்வு, தாழ்வு என்பதின்றி இந்நெறியில் அவை முற்றும் தம் முட் சிறிதுமாறுபாடு முடைய வல்லவெனக் காண்கின்றோம். எக்காலத்தும் எவ்வுயிர்களும், இன்பம் வேண்டாம் துன்பம் வேண்டும் என மறந்தும் கருதுவதில. அவற்றின் அறிவு, விழைவு, செயல் என்னும் இம்மூன்றின் ஒவ்வோரணுக்களும் இன்ப நாட்டத்தோடியங்குவனவே. "வளம்பட வேண்டாதார் யார்? யாருமில்லை" என்னும் பெரியோர் கூற்றும் இவ் வுண்மைக்கு நேரிய சீரிய சான்றாம்.

இங்ஙனம் பல்லுயிர்களும் ஒருசேர விழைந்து நேடும் அரும் பெறற் பொருள் இன்பம் எனின், அம்ம! இவ்வுலகினும் மற் றெவ்வுலகினும் அதனிற் சிறந்த அரும் பெரும்பொருள் வேறியா தென்கை திண்ணமே யாமன்றோ? ஆ! இன்பமே! நிகரற உயர்ந்த அரும்பெருமாண்பு நின்பாலதே! கடவுளும் நீயும் ஓராங்கு உறைவிர்போலும்! நன்று நின் நிலைமை! வாழ்க நீ நாடொறும்!!

இனி ஏனையுயிர்கள் தாழத்தாழ்த்தி நிவந்து தலைமைபூண்ட மனிதர் இவ்வின்பத்தை யாங்ஙனம் அடையமுயன்று எம்மட்டுந் துய்க்கின்றனர்? அவர்கள் அடைந்த அளவிலேயே இன்பநிலை

முற்றுறுமா? மேலும் நீண்டு செல்லுமேல் அதன் முடிவிடம் யாண்டையது? எவ்வகைச் செயல்கள் அம்முடிவை அண்டுவிப்பன? அவற்றை நாம் செய்தல் இயலுமா? இன்பம் நம் கையகப் படின் நம் நிலைமை எவ்வாறிருக்கும்? என்றின்னோரன்ன கடாக்களை எழுப்பி விடைகாண்டலே யாம் எடுத்துக்கொண்ட இப் பொருண்மொழியின் நோக்கமாம்.

ஒருவன் எத்துணைக் கல்வி கேள்வி அறிவாற்றல்களாற் சிறந்தானேனும், மலர்தலையுலகம் பொதுவறப்புரக்கும் மன்னவனாக வாழ்ந்தானேனும், அன்றித் தவவொழுக்கந் தலைநின்று இறைவன்பால் இடையறாப்பேரார்வ வுள்ளத்தனாய்ப் பயின்றானேனும், அன்றி மனைவி மக்கள் சுற்றத்தார் நட்பினர் தற்சூழ இல்லறம் இனிது நடாத்த இசைந்தானேனும், மற்றும் எவ்வகையுயரிய நிலைமை யுற்றானேனும், அன்னானுள்ளத்தும் இன்பத்தை எய்துங் காதலே மிக்குப்பொங்குதல் இயல்பாதலின், அறிவுடையார் யாவர்க்கும் இவ்வாராய்ச்சி பெரிதும் விருப்பந்தரும் பெற்றித் தாய் வேண்டப்படு மென்பதொருதலை. ஆகவே இதனை நுனித்தாராய்வதிற் கற்போர்க் கெளிதாம் வண்ணம் தடை விடைகளாற் சிலசாற்றிக் காண்பாம்.

பொழுது புலருமுனம் கண்களை நிமிட்டிக்கொண்டெழுந்ததுமுதல் இரவிற் படுக்கைபுக்குக் கண்ணயருந்துணையும் ஓயாது பணம், பணம் எனக்கருதியும், கதறியும், கால்தேயக் கொட்புற்றும் வருந்தியீட்டும் பொருள் இன்பம் பயக்கும் கருவியன்றோ? “மன்னுவுலகத்து மன்னிய மூன்றின் நடுவணதெய்த விருதலையுமெய்தும்” “அப்பொருள் துன்னுங்காலைத் துன்னாதன வில்லையே” பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை “இல்லாரை எல்லாரு மெள்ளுவர் செல்வரை—எல்லாரும் செய்வர் சிறப்பு” என்றெல்லாம் தொல்லாசிரியர் சாற்றியுள்ளார்கள். ஆதலின் பொருண் மிகுதிக்கேற்ப இன்பமிகுதி தலைப்படும் எனின், அற்றன்று. “இன்னல்தரும் பொருளை யீட்டுதலும் துன்பமே”! ஆம். ஈட்டியபின் இன்புறலாமன்றோ? என்றால்? “பின்னதனைப் பேணுதலும் துன்பமே”! நன்றாய்ப் பேணுவேமாயின் இன்பமன்றோ?

என்றலும், "அன்னதழித்தலும் துன்பமே"! ஏன் அழிப்பேன்? இம்மிக் காசேனும் ஈயாதிறுகப்பற்றி இல்லுய்க்கக்கடவேன் எனினும், அப்பொருள் நம் விருப்பமின்றிப் பிறரால் வெளவப்படுதலும் கூடும், "பிறர்பால் இழத்தலும் துன்பமேயாம்," "துய்ப்பே மெனினே தப்புந பலவே" எனமொழியும் முன்னோருரைப்படி அது கழிவுறுஞான்று பெருந்துன்பந் தருதலின் பொருளால் அடையுமின்பம் நிலைபேறுடைய தன்றென்க.

"அங்ஙனமாயின், அப்பொருள் கொண்டு, ஐம்புலன்கட்கும் ஒருசேர இன்பமளிக்கவல்ல கற்பகப்பூங்கொம்பன்ன காமன்றன் பெருவாழ்வினைப்பெற்ற கட்டழகும் கற்புடைமையும் ஏனை நற்குண நற்செய்கைகள் முற்றும் நிரம்பிய மாதாரை மணந்தின்புறக்கடவேம். இன்பமென்பதவர்களின் முயக்கத்தால் வருவதனையேயன்றோ? 'காதலிருவர் கருத்தொருமித் தாதரவுபட்டதே இன்ப' மெனப் பகர்வர் நம் தமிழகப்பெரியோர். அன்பினைந்திணையி லமைந்தடங்கும் மெய்யின்பமே. ஆம் ஆம் இதுவே இன்பமடையும் எளியநெறி" என்பிரேல்,

"தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நாகமு மில்லையே." எனவும்,

"காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணம் கூற்று மஞ்சும்
காமமே கள்ளுண் டற்குங் காரணம் ஆத லாலே
காமமே நரகபூமி காணியாய்க் கொடுப்ப தென்றான்." எனவும்

மற்றும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் புகன்றிருத்தலின் அப்பொருட்டானும் இன்பம் கையுறுவதாகாது. கையறுவதேயாம். நீவிர் முற்கூறியவாறு, கட்டழகு, நற்பண்பு, கற்புடைமைகளிற் சிறந்த மனைவியரை எய்தியவருட் சீராமன் அவள் பிரிவாலெய்திய இன்னலும், நளன் அடைந்த அல்லலும், பிறருற்ற பெருந்துன்பமும் அறிது மன்றே. மனைத்தக்க மாண்புடைய வாசுகியார் உயிர்துறந்த காலையில் செம்பொருள் செப்பி உலகைத் தம்மடிப்படுத்த செந்நாப்போதாரும் தம் மெய்ஞ்

அறிவினை அயர்த்தார்போலப்...........“பேதையே போதியோ ......” எனப்புலம்பினரெனின், மனையாளின் எழிலும் குணமும் முன் கூடிய காலையிலின்பம் தந்த அளவுக்கு மேற்பட்ட துன்பத்தைப் பிரிவு நேர்ந்துழி எதிர்பாராது தருமெனக் காண்கின்றேம் அல்லவா? எடுத்தவுடல் எப்போதேனும் இறத்தல் தப்பாமையின், நிலையுறு வாழ்க்கையில் நேருமின்பம் ஓரின்பமென அறிஞராற் கொள்ளத்தக்கதன்றுமென மறுக்க.

அற்றேல், அம்மடமங்கையரீன்ற மணி விளக்கன்ன “மக்கள் மெய் தீண்ட லுடற் கின்பம் அம்மக்கள்—சொற்கேட்டலின்பஞ் செவிக் கென்னுந் தமிழ்மறைக் கெதிர்மறை யிராதாகலின், எட்டா வின்பத்தைத் தளர்நடைச்சிறார்சார்பிற்பெறுதும்” எனின், “மக்களிற் சிறந்த மடவேரய்கேட்டி! நீ கருதியவாறு பொன்னும் மனைவியும் புதல்வர்ப்பேறும் கெழுமப் பெற்றுள்ளோர் எனைப்பலராக அவர்கள் இன்பந் துய்த்தவாறறிந்திலை கொல்லோ! புதல்வரைப் பெறுஞான்றும், பெற்றபின் அவர்கட்குப் பிணி எய்துங்காலையும், அப்பிணியால் வருந்தி யுயிர் துறக்கும் போழ்தும் அன்றி அதற்குத் தப்பி யுய்ந்திடினும் அவர்க்கறிவின்மைகண்டுழியும், அறிவுடையாராயினும் ஏற்ற மனையாரைத் தேடி மணம்புரிவித்தலினும், அவர்கட்கு மகவுளதாக வில்லையே என்பதானும், இங்ஙனமே நீள அவர் வாழ்நாள் முற்றும் நன்மைகளை எதிர் நோக்கி யாதுறுமோ? என்னுமோ? என வண்ணான் துறை முயல்போற் கணந்தோறும் திடுக்கிடுமுள்ளத்தோடு துன்பந் துய்த்தலன்றி எட்டுணையும் மெய்யின்படைதலியலாதாம். வீண் கனவேன்? இன்பம் நமக்கெட்டாத தூரத்துள்ளது. இன்ப மடைந்தேன் என்னும் எவனும் பெருந்துன்பத்தையே அறியாமையால் மாறிக்கருதி இன்பமெனக்கொண்டொழுகி வருகின்றான் என்பதில் சற்றும் ஐயப்பாடின்று. இஃது உண்ணுநீர்வேட்டோன் பேய்த்தேர் கண்டின்புற்றாற்போல்வ தொன்றே. இனி இன்பமென்பத னியல்பு யாதெனின், தானெய்திய பின்னர் யாண்டும் எவ்வாற்றானும் துன்பத் தோற்றமே யில்லாது தொலைத்து என்றும் நின்று நிலவுதலேயாம். இங்ஙனமன்றி, ஓர்காற்றுன்பமும்

ஓர்கால் இன்பமும் மாறிமாறி நம் நுகர்ச்சிக்கெய்த லுணரப் படுதலின் நாமெய்தும் இன்பம் போலியின்பமே எனக்கோடல் பொருத்த முடைத்தாம்.

ஆ! ஆ! நீர்கூறும் அத்தகைய இன்பம், இந்நிலவுகத் தெஞ்ஞான்றும் இல்லாத தொன்றேயாக, இங்கிருந்ததனை அடையவெண்ணுதல், 'பாலைவனத்திருந்து கரும்புதின்ன விரும் புதல் போலும் பேதமைத்தா யொழிந்தது. ஆகலின் "இல்லாத தொன்றனையாம் எய்துவேம் என்கின்ற–புல்லறி வாண்மை கடை" என ஓர் புதுக்குறள் பாடிவிட்டு நினைப்பினின்று நீக்குவதன்றி வேறு செயலில்லை. இனி எப்போதும் இன்பம் வேண்டுமென அவாவுதல் பயனின்று என்னும் முடிவையே இவ்வாராய்ச்சியாற் பெற்றேம்.

நண்ப! நீ மொழிந்தவாறே மெய்யின்பம் அமைந்துள்ளது. அறமும், மறமும் ஆகிய இருவினையும் கலந்து இன்பதுன்பம் நுகர்விக்கும் ஊழ்வயத்தராக, மக்கள் இவ்வுலகிற் றோன்று கின்றனரென அறிவுநூற்கள் அறைதலின், இவ்வுலகில் முழு இன்பப்பேறுறல் அருமையே. இது குறித்தே

"ஓரி னெய்தல் கறங்க ஓரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதலுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னா தம்மவிவ் வுலகம்........." என்று கூறினர்

போறிவமைந்த சீரிய தொல்லோர். ஆயினும், இச்செய்யுள் இறுதியில் கூறப்படும் மற்றோருண்மை கருதியாராய்தற்குரியது. அஃதாவது, "இனிய காண்கித னியல் புணர்ந்தோரே" என்ப தாம். இதுகொண்டு உலகியல்பெவ்வாறுயினும் அறிவுடைப் பெரியோர் தமது கல்வியுங் கருத்துமொன்றி ஈண்டே அப் பேரின்பத்தை வருவித்துத் துய்ப்பர் என்பது உணரக்கிடக் கின்றது

இதுகாறும் ஆய்ந்தவாற்ருல், மிகத்தாழ்ந்த நிலைவாழ்க்கையின் மிடிமைபுணர்ந்த குடிமையினும் உயர்நிலை வாழ்வினர் துய்த்தற்குரிய இன்பம் தோன்றும் என்பது கொண்டு,

“தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே” எனவுலகியல்பில் ஊன்றி அழுந்தி அறிந்தமேலோர் விளம்புதலின், இங்ஙனம் உயர்ந்தோர் தாழ்ந்தோர், கற்ருேர் மற்ருேர், அறப்பெருஞ் செல்வர், மிகப் பெருமிடியினராகிய பலர்க்கும் ஒப்பப்புலப்படும் இன்பம் மெய்யின்பமாகாதெனவும், சொறிநோய் கொண்டோ ஞெருவன் தினவுதீரச் சொறிந்துகொள்ளுங் கணத்திற்ருென்றிப் பின் எரிச்சலாய்மாறித் துன்புறுத்துவதோர் இன்பத்திற்கினமாம் இன்பப்போலி யெனக் கழித்து உவர்க்கத்தக்கதா மெனவும் கண்டாம்.

ஆகலின், இனிக்கற்ருேரடையும் நற்பேரின்பம் யாதெனக் காண்பாம். நூற்றுணையோடு உலகநுகர்ச்சிகளை யொப்ப ஆய்ந்து போந்தவாறே இதனையும் ஆய்தல் சிறிதாம். நம் தண்டமிழ் நூற்களிற் காலத்தாலும், நன்குமதிப்பாலும் முற்பட்டுச்சிறந்து மிளிரும் தொல்காப்பியத்துள் உவகைச்சுவைக்கு நிலைக்களன் கூற வந்த ஆசிரியர் தொல்காப்பியனுர் “செல்வம் புலனே புணர்வு விளையாட்டெனச்--சொல்லப் பட்ட வுவகை நான்கே” என வரையறுத்துள்ளார். இந்நான்கனுள்ளும், புலனெழித்தேனை மூன்றுந்தருமுவகை மெய்புவகையன்ருமென முன்னுராய்ந்து கழிக்கப்பட்டமையின் ஈண்டுப் புலனும் இன்பத்தையே ஆராய்வாம். “புலனே” என்பதன் ஏகாரம் இடையிட்டுக்கொண்ட எண்ணேகாரமாகாது. என்னே? எனவென்னும் எண்ணுமொழி இறுதிக்கண்ணின்று சொற்ரொறும் தொடர்தலின். மற்று, அவ்வேகாரம்,

பிரிநிலையும் தேற்றமுமாகக் கொள்ளப்பெற்று, ஏனைமூன்றினும் சிரியவுவகைதோன்றும் நிலைக்களன் அதுவே எனவலி யுறுத்துவதாம். ஈண்டுப்புலனென்பது அறிவு. ஆகவே அறிவு கருவியாத் தோன்றுமின்பமே மேதக்க மெய்யின்பமாமாறறிதும்.

ஆசிரியர் வள்ளுவனார், இன்பத்தை அடைதற்குச்சில உளவு கள் கூறுகின்றனர். அவற்றுள்

"இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்" என்பதொன்று.

உலகநிகழ்ச்சிகளிலமைந்து வினைதர வருவனவாகிய இன்பதுன்பப் பேரலைகளில் அகப்பட்டுசலாடும் மக்கள் இன்பம் நேருங்காலத்தே அதனை மதித்து மகிழாது அவமதித்து,இஃதுலகியல்பே,இஃதோர் கால் துன்பந்தரும் தோற்றமே எனக்கெப்பமுற்ற வுள்ளத்தின ராய்ப் பெருமித ஒழுக்கமேற்கொள்வாராயின் நாளடைவில் அப் பயிற்சியே பொருட்டாக என்றுந் துன்பமே தோன்றாமற் செய்து கொள்ளலாகும் என்பது இக்குறளின் நல்லறிவுறாஉவாகும். இஃது முற்றிலும் உண்மையே. இதனைச்சற்று விரித்தால் எளிதில் விளங் கும். துன்பமுறும் போழ்து துன்பமுறாதிருத்தல் இன்பப்பேற் றுக்கு நேரிய வழியாமேனும் அஃது சொல்லளவாவதன்றிச் செய் கையில் காட்டலியலாததாம். அரும்பெறல் மகவையோ, அருமந்த மனைவியையோ, கண்ணன்ன கேளிரையோ நமன் கொளக் கொடுத்தானொருவன், அவர்தம் நற்பண்பு, நற்செய்கை, தன் பால் வைத்திருந்த பேரன்பு முதலியவற்றை எண்ணி எண்ணிப் புகழ்ந்து புகழ்ந்து புலம்பி விம்மிவிம்மிக் கவலுஞான்று பிறனொரு வன் அவனைத் தேற்றுவானாகி "நீ நனிபேதை." "நமக்கு முது வழியே நாம்போமளவும்-எமக்கென்னென்றிட்டுண்டிரு" "நின் னோரன்னர் இந்நிலத்துப்பலர்." "கற்றோர் முற்றோன்றாகழி விரக்கம்." நாடகக்கூத்தர்போலப் பலர்தோன்றி ஆடிக்கழிதரு மிவ்வுலகியல்பென்றறியாய் கொல்? "செத்துக்கிடக்கும் பிணத் தருகே யினிச்சாம்பிணங்கள் — கத்துங் கணக்கென்னகாண்?" எனப் பலவாறு கூறுவானெனினும், அவ்விழவுதனக்கே எய்துங்கால் இவன் முன்புகன்ற ஞானம் வாய்ஞானமாகக்

கழியத் தான் தேற்றியோனினும் பெரிதுங்கவலையுற்று வாய்திறந் தாற்றி மனம் பதைப்புறுவனன்றே! ஆதலின், துன்புறுங்காலை துன்பமுறற்க என இயலாக்காரியத்தை இயம்பல் தகுதியன் றெனக்கழித்து ஓர் பொருளிற் காதல்மிக்குக் கூட்டுண்ட வின்பமேஅப்பொருட் கேட்டிற் றுன்பவுருப்பூண்டு தொடக்கி யுருத்து வருத்துதலின் முன்னறிவுடையோர், காதலித்தின்புற வருங்காலையே அப்பொருளின் நிலையற்றவியற்கை கருதி அவ் வின்பத்தைப்புறக்கணித் தொதுக்குவரேல், "யாதனின் யாதனி னீங்கியா னோதல்—அதனி னதனி னிலன்" என்னும் பொய்யா மொழிப்படி அதுபற்றி யெய்தும் துன்பத்தை எளிதிற் றுடைப்பர். துன்ப அறுதியே இன்பமாதலன்றி வேறின்மையின் அதுவே இன்பமெய்தும் நல்வழியெனக் கூறியவாறும் இஃது.

எது செய்தற்கருமையோ, (எது எல்லோரானும் செய்யற் கியலாத தாகுமோ) அதனைக்கூறாது, யாவரும் சற்று முயன் றால் செய்யக்கூடியவதனையே வற்புறுத்தல் அருட்கடலாகிய அறவோரியல்பாம். ஆதலின், நம் செந்நாப்போதார், நம் மனோர்க்கிரங்கி இவ்வெளிய வழியிற் பயிற்சிபெறுமின் என உய்யும்வழி கூறிக் கட்டளையிடுவாராயினர். இவ்வாறே மற்றொரு பெரியார், நீவிர் அறஞ்செய்யும் ஆற்றலில்லேம் என்பீரேல் நுமக்கியல்பாயமைந்த வலிகொண்டு பிறரை வருத்தாதொழித லியனுமன்றோ? அவ்வணம்புரிதிர். அதுவே பேறப்பயனும் என்று நன்மொழி புகட்டுவாராக,

"நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே" எனப் பணித்

தனர். இன்பமடைய விழைவானொருவன் பயிலும் வழிகளில் இஃதொன்றுகண்டாம். ஊருரை யண்முதற்குப் பலவழிகளுளவா மன்றே, அங்ஙனமே நாம் இன்பத்தை எட்டிப்பிடிக்க இன்னு முள்ள கருவிகளையும் தருவோம்.

"இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையும் சிறப்பு" என்பது நம் தெய்வத் தமிழ்மறையின் மற்றொரு செவியறிவுறூஉ. இவ்வின்பமய அமுதவூற்றொழுகும் கடவுண்மொழிக்கு உரைகூறப்புக்க பரிமேலழகியார் கருத்தையுமுட்கொண்டு மற்றிதனுண்மையைச் செப்பமுறக்காண்பாம். "ஒருவன் தனக்கியல்பாய் எய்தும் துன்பத்தையே, இஃதும் இன்பமே எனத்தனது மதிநுட்பம் நூலொடுடைய திட்பத்தால் கருதுவானாயின், அஃது அவனைக்கெடுசூழும் பகைஞரும் வியந்து வேட்கையுற்றுப் பின்பற்றி வணங்குமாறு மிகச்சிறப்பாய நிலைக்கணுய்க்கும்". துன்பத்தை இன்பமெனக் கொள்ளல் இயலாதாலெனின், துன்பமும் ஒரு கணத்தே மனத்தின்கண் தோன்றியழியு மியல்பிற்றாயும், உயிர்க்கியல்பன்றி மனத்தின்கண்நிகழும் ஓர் கோட்பாடேயாயும் துணியப்படுதலின் இன்பமெனக் கோடல் அறிவின் வலியுடையார்க்கமைவதேயாமென விடுக்க. துன்பம் உயிர்க்கியல்பன்று என உண்மை கண்டார்க்கு, அதனைமாறுபட (அதாவது இன்பமாக)க் கோடல் எளிதேயாம் என்பதிக்குறளின் உள்ளுறை. முற்கூறிய இன்பக் கருவியினும் இஃது மிகநேரியதே யாயினும் இங்ஙனம் கருதுதல் உண்மையறிவு (தத்துவஞானம்) பெற்ற சில்லோர்க்கன்றி நம் போன்ற பலர்க்கு மெளியதொன்றன்றாகும்.

(தொடரும்.)

சிந்தாமணியின் நந்தாவொளிகள்.

திருவாளர் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஈபர் கல்லூரி, திருச்சி.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியாகிய அன்னைக்குப் போணிகலங்களாக விளங்குகின்ற ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகவுள்ளது சீவக சிந்தாமணி யென்பது. இதனையியற்றிய ஆசிரியர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராவர். பிற்காலத்திலே விருத்த யாப்பினால் பெருங்காப்பியம் இயற்றிப் போந்த கம்பநாடர் போலும் சீரிய கவிகளுக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாகவுள்ளது இச்சிந்தாமணி யென்றால் இதன் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்? எப்பொருளினையும் மெய்ப்பாடு தோன்றக்கூறும் இவ்வாசிரியரது திறம் அளவிட்டுரைக்கும் தகைத்தன்று. எவ்வகைச் சுவைகளையும் செவ்விதிற் பெய்து வைத்த கொள்கலம் போன்று விளங்கும் இக்காப்பியத்தைத் தமிழறிந்தோர் யாவரும் கற்று இன்புறுதல் வேண்டும். உமாபதி சிவாச்சாரியார் போலும் சில பெரியோர்கள் இதனை யிழித்துரைத்தது மதக்கோட்பாடு பற்றியே யன்றி, செய்யுட் சுவை முதலியன பற்றியன்றென்க. மாணிக்கவாசகரை வீட்டின்றன்மையை நன்கு உணர்ந்தோரெனக்கூறிய நச்சினார்க்கினியார்தாமே இதற்கு உரை செய்திருக்கின்றார்! வீடு பேற்றின் இயல்பினை விளக்க நேர்ந்துழி 'அற்றது பற்றெனி லுற்றது வீடு' என்பது முதலிய திருவாய்மொழிப்பகுதிகளை யெடுத்துக் காட்டிய சீரிய வைணவரான பரிமேலழகரும், சிவஞானபோதம் முதலிய சைவ சித்தாந்த நூல்கட்குப் பேருரையும், சிற்றுரையும் முதலியன வகுத்தருளிய மாதவச் சிவஞான யோகிகளும் முதலாயினார் சிந்தாமணியிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டிருக்கின்றனரே! இவ்வாறிருக்கவும் இக்காலத்துச் சமயப்பற்றினர் என்போரிற் சிலர் அதனைக்கண்ணால் நோக்குவதும் இழுக்குடைத்தென்று கருதுவது தாம் அதன்கண் நுழைந்து செல்லும் மதிவலி பெற்றிராமை பற்றியே போலும்!

இனி, சிந்தாமணியிலே கற்பனை நயஞ்சிறந்து சுவை கெழுமி விளங்குவனவும், அரும்பெரு நீதிகளை அறிவுறுத்துவனவுமாகிய பாடல்களிற் சிலவற்றைத் திரட்டி வெளிப்படுத்தல் கற்போர்க்குத் தமிழிலே ஆர்வத்தை யெழுப்பி நலம்பயக்கு மென்றுகருதி, அங்ஙனம் புரிய ஒருப்படுகின்றேன். இதற்கு நச்சினார்க்கினியார் எழுதியுள்ள உரை மிகச் சீரியதாயினும் இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றவர்களுக்கே அது பயன் படக்கூடும். ஆகலின் இங்கே தொகுக்கலுறும் பாடல்களை எளிய பொழிப்புரையுடன் வெளிப்படுத்தல் கடனாகின்றது.

நாமகளிலம்பகம்.

1. காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே.

(உரை) காய்த்தல் மாட்சிமைப்பட்ட தெங்கின் நெற்று விழுதலாலே, கமுகின் உச்சியிலுள்ள பொலிவு மிக்க தேன் போலும் இனிய நீரையுடைய பாக்குத்தாறு கிழிந்து, பலாப்பழம் பிளந்து, தேமாங்கனி சிதறி, வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கதம் என்று பெயர் கூறப்பட்டு, புகழினாலே திசை முழுதும் சென்றதொரு நாடு உண்டென்க.

2. சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

(உரை) நெற்களானவை அரிய சூலையுடைய பச்சைப் பாம்பின் தோற்றம்போல் நேர்மையாகக் கருத்தங்கி, நின்று, குடிப்பிறவாதவர் செல்வம் போன்று தலையை நேரே நிமிர்த்தி, மெய்ப்பொருளை ஆராய்ந்த நூற்கல்வியினையுடைய மாந்தரைப் போல் மிகவும் வளைந்து விளைந்தனவென்க. (சொல்—நெல்).

3. நற்றவஞ்செய் வார்க்கிடம் தவஞ்செய் வார்க்குமஃதிடம்
நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றை நாடு வட்டமாக வைகு மற்ற நாடரோ.

(உரை) அவ் ஏமாங்கதம் என்னும் நாடு, விண்ணுலகமானது வெற்றியையுடைய தனதின்பத்தை உலகினை விரும்பப் பண்ணுதற்கு மகிழ்ந்து வீழ்ந்ததென்னும்படி, தன்னை யொழிந்த நாடு தனக்கு எல்லையாகப் பொருந்தியிருக்கும். அது வீடுபேறு கருதி நல்ல தவத்தினைச் செய்வார்க்கும் இடம்; அது மறுமை கருதி இல்லறம் நடத்துவார்க்கும் இடம். அது ஞானமாகிய நற்பொருள் பயக்கும் கல்வியைக் கற்பார்க்கும் இடம்; இவ்வுலக நடைக்குரிய பொருளினைத் தேடுவார்க்கும் இடமென்க.

4. எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருள்திருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோல்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானுத் தகையவே.

(உரை)எண்ணெயும் மயிர்ச்சாந்து மென்கின்ற இவற்றிலே முழுகி, இருளைப்பிடித்து நீள முறுக்கி ஒள்ளியநறிய துகிற்கிழியாகிய உறையிலே பொதிந்து அதினின்றும் வாங்கப்பட்டவை போல, நோக்கினூர் கண் இருளும்படி நெறிப்பு மிக்குக் கடை குழைந்த கரிய விசையையின் கூந்தல்கள் சேடியர் அழகிய பூவால் அருச்சித்து வழிப்பட்டாலும் வருந்தும் தன்மையன என்க.

5. இவ்வுருவு நெஞ்சென்னும் கிழியின்மே லிருந்திலக்கித்
தவ்வுருவு நினைப்பென்னும் துகிலிகையால் வருத்தித்துக்
கவ்வியத ஞேக்கினூற் கண்விடுத்துக் காதனீர்
செவ்விதிற் றெளித்தானுக் காமப்பூச் சிதறினுன்

(உரை)கூறிய இவ்வுருவை ஒருப்பட்டிருந்து நெஞ்சென்னும் படத்திலே குறித்து, அதனை நினைவென்னும் எழுதுகோலால் உறுப்பு விளங்க எழுதி, தான் கைக்கொண்ட தியானத்தாலே நயன

மோக்கம் பண்ணி, அன்பென்னும் நீரைச் செவ்வையாகத் தெளித்து, அமையாத வேட்கையாகிய பூவைச் சிதறினான் என்க. (சச்சந்தன் தன் மாமன் மகளாகிய விசையையின் பேரழகில் ஈடுபட்டு அவளை விரும்பினான் என்பது இங்ஙனம் கூறப்பட்டது)

6. ஆரறி விகழ்தல் செல்லா வாயிரஞ் செங்க ணானும்
கூரறி வுடைய நீரார் சொற்பொருள் கொண்டு செல்லும்
பேரறி வுடைய நீயும் பிணையனாட் கவலஞ் செய்யும்
ஓரறி வுடையை யென்றா னுருத்திர தத்த னென்பான்

(உரை)(சச்சந்தன் நிமித்திகன் கூற்றைஏற்றுக்கொள்ளாமைகண்டு) உருத்திர தத்தன் என்பான் பிறரால் இகழப்படாத நிறைந்த அறிவினையுடைய இந்திரனும் அமைச்சர் சொற்பொருளைக்கொண்டு நடக்கும்; அவனைப்போல் நீயும் அறிவுடையை யாயினும் இப்பொழுது இவன் சொல்லைக் கொள்ளாமையால் பெண்மான் போலும் விசையைக்கு அவலஞ் செய்யும் ஓரறிவுடையை ஆயினாய் என்றான் என்க.

7. கோணிலை திரிந்து நாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி
நீணில மாரியின்றி விளைவஃகிப் பசியு நீடிப்
பூணணி மகளிற் பொற்பிற் கற்பழிந் தறங்கண் மாறி
ஆணையிவ் வுலகுகேடா மரசுகோல் கோடி னென்றான்.

(உரை) அரசன் நீதி செலுத்துவதிற் பிறழ்வானாயின், கோள்கள் நிற்கும் நிலைகுலைந்து, இரவின் நாழிகை குறையப் பகற் பொழுதுகள் மிக்கு, மழையில்லாது, நீணிலம் விளைவு சுருங்கி, பசி மிக்குப் பூணணிந்த மகளிருடைய அழகிய கற்பழிந்து, அறச்சாலைகளும் இன்றி, இவ்வுலகு கெடாநிற்கும்; அரசன் ஆணை யென்றான் என்க. (கட்டியங்காரன் தன்னை அரசனாக்கிய சச்சந்தனைக் கொல்லக் கருதியபொழுது தருமதத்தன் என்னும் அமைச்சன் இருவர் பிழையையும் உட்கொண்டு கூறியது இது.)

8. சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலும் அழிவு மெல்லா மவை பொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்.

(உரை)-வளையலணிந்த தோள்களை யுடைய நங்காய்! இறத்தலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் ஆகிய எல்லாம் தம் வினைகளின் பயனாலுண்டாகும். அவ்வாறிருக்க, இறத்தற்கும் அழிதற்கும் துன்புறுவதும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுவதும் அறி வின்மை யன்றோ? வினைப்பயனுறுதல் பொருட்கு இயல்பாதலை உணராமையின் நீ பெரிதும் அறிவுடையை யல்லை என்றான் என்க. (அமைச்சனா யிருந்த கட்டியங்காரன் அரசனாகிய சச்சந்தனைக் கொல்லுதற்கு மாளிகையை முற்றுகை யிட்ட பொழுது வருந்துத லுற்ற விசையை யென்னும் தன் மனைவிக்கு அரசன் கூறியது இது. வருகின்ற பாட்டும் அது.)

9. தொல்லைநம் பிறவி யெண்ணில் தொடுகடல் மணலுமாற்றா
எல்லைய அவற்று ளெல்லாம் ஏதிலம் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிகள் தம்முட் சேரலம் சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா.

(உரை)-பழைய நம் பிறப்பை யெண்ணின் கடலின் மணலும் உறை யிடப் போதாத அத்துணை மிகுதியுடையன; அப் பிறவியு ளெல் லாம் நாம் யாதும் சம்பந்த முடையோ மல்லோம். இனி இவ் வுடம்பினின்றும் நீங்கிச் செல்லும் கதிகளிலும் சேர்தல் ஒருதலை யன்று. ஆதலின் இப்பொழுது சேர்ந்து நின்ற இரண்டு நாள் உறவை உறவாகக் கருதி அதற்கு இரங்க வேண்டா என்றான் என்க.

10. உண்டென வுரையிற் கேட்பார் உயிருறு பாவ மெல்லாம்
கண்டினித் தெளிக வென்று காட்டுவாள் போல வாகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள்.

(உரை)—வானை யளாவிய மாளிகையில் தேவமாது போல நல்வினையின் வண்ணமாய் இன்பம் நுகர்ந்திருந்த விசையை யானவள், இப்பொழுது, உயிர்கள் துய்க்கும் பாவம் உண்டென்று நூல்களிற் கேட்போரெல்லாம் இனி என்னைக்கண்டு தெளிவீராக வென்று உலகத்திற்குக் காட்டுவாள் போலத் தான் தீவினையின் வண்ணமாய்க் காட்டிலே தமியளானாள் என்க. (விசையை யானவள் மயிற்பொறி யேறிச் சென்று நள்ளிருளில் புறங்காட்டை யடைந் திருந்தமை குறித்துக் கவி சொல்லியது இது.)

11. வெவ்வா யோரி முழவாக விளிந்தா ரீமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டியரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கு மிருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கியல் வேந்தே.

(உரை)—புறங்காட்டிலே மகன் பிறந்த பொழுதில் விசையை யானவள் மகனைப் பார்த்து நம் கோமானானவன் பன்னீராண்டு கறை விடுங்கள், அறச்சாலையும் கோயில்களும் நிறுவுங்கள், சிறைப் பட்டவர்களை விட்டு விடுங்கள், கருவூலத்தைத் திறந்து ஊர் தோறும் கொண்டு போய் எற்போர்க்குக் கொடுங்கள், நகரில் பண்டசாலைக ளெல்லாம் திறந்து எழு நாள் வரையில் யாரும் ஆடை அணி முதலிய எவற்றையும் எடுத்துக் கொள்ளுமாறு விடுங்கள், என்று இங்ஙனம் அறிவித்தும், யானைகளும் நவமணிகளும் பட்டாடைகளும் புலவர்களுக்கு வழங்கியும், மற்றை அரசர்க்கெல்லாம் திருமுகம் போக்கியும் கணிகளாற் பிறப்பேடு செய்வித்தும் மகிழுமாறு பிறக்க வேண்டிய நீ, வேந்தே! கொடிய வாயை யுடைய ஓரியின் குரல் முழ வோசையாகவும், இறந்தவர்களின் ஈமச்சுடர் விளக்காகவும், பிறந்தார்க்கு ஒவ்வாத சுடுகாடாகிய அரங்கிலே பேய்கள் நிழல்போல் அசைந்து கூத்தாடவும், கூகைகள் எவ்விடத்து மிருந்து குழறிப் பாராட்டவும் ஓ! ஓ! தீவினையேன் காண்டற்காகப் பிறக்குமாறு இத்தன்மைத்தாய் இருந்தது, இதுவோ அரசர்க் கியல்பு கூறாய் என்றாள் என்க.

12. பற்று மன்னன் நகர்ப்புறமால் பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால்
உற்று ரில்லாத் தமியேனுல் ஒதுங்க லாகாத் தூங்கிருளால்
மற்றிஞ் ஞால முடையாய்நீ வளருமா று மறியேனுல்
எற்றே யிதுகண் டேகாதே யிருத்தி யால்என் இன்னுயிரே.

(உரை)--இவ்வுலக முடையாய் நீ கிடக்கின்ற இடம் பகைவனது நகர்ப் புறமாய் இரா நின்றது ; நினது பாயல் பிணஞ் சூழ்ந்த சுடுகாடாய் ஓர் துணையுமில்லாத் தமியேனாய் இரா நின்றேன் ; நின்னை அப்பாற் கொண்டு போகக்கருதின் போகலாகாத செறிந்த இருளாயிரா நின்றது; மேல் நீ வளருமாறும் அறியேனுயிரா நின்றேன் என்று பிள்ளையை நோக்கிக் கூறி, எனது கொடிய உயிரே! நீ இதை யெல்லாம் கண்டும் போகாது இராநின்றாய்; இதற்குக் காரணம் என் என்று கூறினாள் என்க.

13. அறிவினாற் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயர ஐவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலுள் நின்றார்.

(உரை)—அறிவினாற் பெரிய இயல்பினை உடையாராயினர் தீவினை கழிய நின்ற நன்னெறியினைக் குறுகி நிறைந்த இன்பமாகிய கடலகத்தே நின்றனர். வேட்கை யென்னும் நஞ்சினையுடைய உடம்பென்னும் பாம்பிடத்தில் பொறி யென்னும் பெயரையுடைய ஐந்து வாயிடத்தே களிப்பைச் செய்கின்ற பொருள்களிலே அடிப்பட்டு நின்றோர் துன்பமாகிய கடலுளே அழுந்தினர் என்க. (இதுவும் பின்வரும் பாடல்களும் சீவகனுக்கு ஆசிரியன் கூறிய உறுதி மொழிகளாகும்)

14. கூற்றுவன் கொடியனாகிக் கொலைத் தொழிற் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்து நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்றும் அளியமோ பெரிய மேகாண்.

(உரை)-கூற்றுவன் கொடியவனாய்க் கொலைக்கருவியை ஆராய்ந்து தடுத்தற்கரிய வலையை வீசி வைத்தான். அதனை அறியத்தக்க

நாமும் அறிந்து தவஞ்செய்து அவன் வலையினின்றும் தப்பிப் பேரின்ப உலகத்தை நோக்கி நெறிப்படப் போதலைத் தெளியா திருக்கின்றோம். இத்தகைய நாமும் ஒ! ஒ! பெருமையுடையமே காண் என்க.

15. பேரஞ் ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்றும் அதன் பயன் கோடல் தேற்றும்
ஒருமைம் பொறியு மோம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்தவெல்லாம்.

(உரை)-பெரிய துன்பத்தை யெல்லாம் நீக்குதற்குக் காரணமான பிறப்பறுக்கும் மனிதயாக்கையைத் தவப்பயனாற் பெற்றும்; பெற்றும் அதன் பயனைக்கொள்ள அறிகின்றிலேம். ஐம்பொறிகளையும் ஐம்புலன்களாலே பேணி உள்ள நாள் சென்றால் நெருப்பானது உடம்பைக் கவரும் பொழுது நினைத்த அறமெல்லாம் செய்யக் கூடுமோ ஓர்ந்து பாரும் என்க.

16. தழங்குரல் முரசிற் சாற்றித் தத்துவந் தழுவல் வேண்டிச்
செழுங்களி யாளர் முன்னர் இருளறச் செப்பினும்
முழங்கழல் நரகின் மூழ்கு முயற்சிய ராகி நின்ற
கொழுங்களி யுணர்வி னாைக் குணவதங் கொளுத்தலாமோ.

(உரை)--எல்லாரும் தத்துவ நெறியைத் தழுவுதல் வேண்டிப் பிரகிருதியில் மயங்கிக் கிடப்பார் முன் முரசறைந்து இருள் தீரச் சொன்னாலும் அது கொள்ளாது, முழங்குகின்ற அழல் வடிவாய நரகத்தின் மூழ்கும் முயற்சியராகும் மருண்ட அறிவினர்க்குச் சீலம் கொளுத்தலாகுமோ என்க.

17. காட்சிநன் னிலையில் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சிசாலொழுக்கமென்னும்வயிரத்தாழ் கொளுவிப்பொல்லா
மாட்சியில் கதிக ளெல்லா மடைத்தபின் வரம்பி லின்பத்
தாட்சியி லுலக மேறத் திறந்தனன் அலர்ந்த தாரான்.

(உரை) மலர்ந்த பூமாலையையுடையனாகிய சீவகன், அவனைச் சரணடைந்து, காட்சியாகிய நல்ல நிலையில் ஞானமாகிய ஒளி

பொருந்திய மணிக்கதவினைச் சேர்த்தித் திட்பம் அமைந்த ஒழுக்க மென்கிற வயிரத்தாழைக் கொளுவி, மாட்சியில்லாத பொல்லாத தீக்கதிகளை யெல்லாம் அடைத்த பின்பு, எல்லையில்லாத இன்பத்தையுடைய வீட்டுலகத்தை அடையுமாறு வழி திறந்தான் என்க.

[தொடரும்.]

உ

திருச்சிற்றம்பலம்.

வெஞ்சமாக் கூடலூர்.

திருவாளர். பண்டிதர், அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், அரசியலார் கல்லூரி, கோயமுத்தூர்.

இது கொங்குநாட்டில் பாடல்பெற்ற சிவ தலங்கள் ஏழனுள் ஒன்று. ஒவ்வொரு தேவாரப் பதிகமே பெற்ற நூற்றைம்பத்து மூன்று தலங்களினும் ஒன்று.

இதனை "... சிலமிகு மவினாசி திருமுருகன் பூண்டி திருநணு கொடிமாடச் செங்குன்றூர்தானே. வெஞ்சமாக்கூடல் கொடுமுடி கருவூர் கொங்கில் மேவுமேழ்..........." என்னும், திருப்பதிக்கோவைச் செய்யுளடிகளாலும் (10, 11);

"திருமாணிகுழி.........திருவாப்பனூர் மீயச்சூரவ்வூர் தன்னிற்றிகழ்ந்த திருவிளங்கோயில் வெஞ்சமாக்கூடல் ...."
"இவைகட் கிரும்பதிக மொவ்வொன்று."

என்னும் திருப்பதிகக் கோவைச் செய்யுட் பகுதிகளாலும் (8, 9) அறியலாம்.

தலம்.

இத்தலம் கருவூரிலிருந்து அரவக்குறிச்சி நோக்கி மேற்றிசை செல்லும் வழியிலிருக்கிறது. இது, வானியாறு காவிரியோடு கூடுமிடத்தை *வானிகூடல் என்று வழங்குவதுபோலவே, குடவனாற்றோடு மற்றொரு கான்யாறு கூடுவதால் கூடலூர் எனப்பட்டு, அப்பெயரையுடைய பிறவூர்களினின்றும் பிரித்து வழங்கற் பொருட்டு இதனையாண்ட ஒரு சிற்றரசனாகிய வெஞ்சன் என்பவனது பெயரொடு படுத்து வெஞ்சமாக் கூடலூர் என வழங்கப் பட்டு வருகிறது.

இஃது நந்தம் சுந்தரமூர்த்தி நாயனாருளிய தேவாரப்பதிகம் உடையது. முல்லை நிலத்தது.

திருநணா, இரண்டாறுகளின் இடையிலிருந்தும், மருதவளம் சிறிதுமின்றிக் குறிஞ்சியாகவே யிருத்தலினால், நமது திருஞான சம்பந்தப் பெருந்தகை, தமது திருப்பதிகத்தில், அதனைக் குறிஞ்சி நிலவருணனைகள் கூறித் துதித்திருப்பதுபோலவே, ஆற்றங்கரையி லிருந்தும் முல்லை நிலத்ததாகிய இவ்வெஞ்சமாக் கூடலூரையும் நந்தம் சுந்தரமூர்த்தி நாயனார், தமது திருப்பதிகத்தில் முல்லை நில வருணனை கூறி யருளியிருப்பது கண்டறிந்து மகிழத்தக்கது.

தீர்த்தம்.

இத்தலத்தில் முற்குறித்த குடவனாற்றைத்தவிர வேறு தீர்த்த நீர் நிலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாற்றை நந்தம் நம்பியாரூரர் "சிற்றாறு" எனத் தமது பதிகத்தில் கூறி யருள்வர். அண்ணிய தூரத்தில் ஆன்பொருநை (ஆம்பிராவதி) ஓடுகின்றதாதலின், அதனை நோக்க இது சிறியதாயிருத்தலாற் சிற்றாறென்னப்பட்டதுபோலும்.

---

* இத்தலம் - திருநணா; இதனைப் பவானிகூடலென்றனர். இவ்வாறே கிருட்டினை நதியோடு துங்கபத்திரை கூடுமிடத்தைக் கூடற்சங்கம மென்றலுங் காண்க.

பதிற்றுப்பத்தில், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் கரணமமைந்த காசறு செய்யுட் பரணர் பாடிய ஐந்தாம்பதிகக் கடைசிச் செய்புளிலும் அதனுரையிலும் கூறப்பட்டுள்ள குடவனாறு இச்சிற்றாறே.

அச்செய்புள்,

“ மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்
கான்மயங்கு கதமுறை யாலியொடு சிதறிக்
கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇச்
செங்குணக் கொழுகுங் கலுழி மலிர்நிறைக்
காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூட லனையை ” என்பதாம்.

இதனுரையாவது,

“மூன்றுடன் கூடிய கூடலென்றது, அக்காவிரிதானும், ஆன்பொருநையும், குடவனாறும் இம்மூன்றும் சேரக்கூடிய கூட்டமென்றவாறு' என்பதாம்.

இக்குடவனாறுதான்

“ ஆரமணி யாரமணி யாரமணி வாரிநெடு
வாரியிடுங் குடவமா நதியான் ”

என்று விறலிவிடுதூதிற் கூறப்பட்டதும்.

“ எறிக்குங் கதிர்வே யுதிர்முத்தமோ
டேலமிலவங்கந் தக்கோலமிஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திணைத்தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்தி கண்மேற் குயில்கூவலறு
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக்கூடல்
விகிர்தாவடியேனையும் வேண்டுதியே ”

என்னும் தேவாரப்பதிகத்தின் முதலிரண்டடியிலும் இவ்வாற்றின் வளம் கூறப்படுகின்றது. இன்னும் 2, 3, 4, 9, இப்பதிகங்களாலும் இவ்யாற்றின் வளம் கூறப்படுகின்றது.

இவ்யாறு ஆனைமலைத் தொடர்ச்சிகளில் உண்டாகி வருகின்றது. இவ்வானைமலைச்சாரலிலும், இதனைச்சார்ந்த பூநாய்ச்சி மலைச்சாரலிலும், இன்றைக்கும் பல ஏலக்காய்த் தோட்டம் முதலியன இருக்கின்றமையும், அங்கு அவை சிறப்பாகப் பயிரிடப்பட்டுச் சரக்குகள் பலவிடங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றமையும் அறியத்தக்கன.

ஆதலின் நந்தம் நம்பியாரூரமூர்த்திகள் ஏலம், கிராம்பு, வால் மிளகு, இஞ்சி ஆகிய இவற்றைக் குடவனாறு அடித்துக்கொண்டு வருகிறதென்றது எத்துணையும் பாராட்டத்தக்கதாம்.

இவ்வாற்றோடு முற்குறித்த கான்யாறு கூடுமிடத்துக்கருகில், ஆற்றின் கீழ்க்கரையில்தான் கடவுளின் திருக்கோயில் இருக்கிறது.

கடவுளின் திருப்பெயர்.

கடவுளின் திருப்பெயர் விகிர்தேசுவரன் என்பது. விகிர்தன்-வேறானவன். அதாவது,

“ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
தேவரையு மாலயன்மு தற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான் *

என்பதிற்போலவே, மற்றைத் தலங்களினும் பார்க்க, இத்தலத்தில் தன்னடியார்க்குச் சீரியதோர் தண்ணளிபுரியும் அருளிப்பாடுடையான் என்றபடியாம். இக்கருத்தைக்கொண்டே நந்தம் நம்பியாரூரர் தமது தேவாரத்து ஒவ்வொரு பதிகத்திலும் “வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே” என அடியேன்

* பெரியபுராணம் (தடுத்—37).

நினது தண்ணளிக்குக் கொள்கல மல்லேனாயினும், விகிர்த னென்னும் பெயருடையை யாகையினால் நீ, நின் மெய்யடியாரொ டொப்ப வென்னையும் ஏற்றுக்கொள்ளற்குரியை என்னுங் கருத்தாற் கூறுகின்றனர்.

அம்மையின் திருப்பெயர்.

பண்ணேர்மொழியம்மை என்பது. அது இத்தலத்தேவாரம் நாலாம் பதிகத்தில் "பண்ணேர்மொழி யாளை யோர் பங்குடையாய்" என்று கூறியிருத்தலால் அறியலாம். இவ்வாறே, அம்மையின் திருப்பெயர் பதிகங்களிற் குறித்தலைப் பிற இடங்களிலும் அறியலாம்.

தேவாரத் திருமுறை பதித்தோரெல்லாம், தலத்தில் வழங்குவதையேனும், பதிகங்களிற் கூறுவதையேனும் அறியகில்லாராய் வேறு பெயர் எழுதிப்போயிருக்கின்றனர். அவர் இத்தலத்து அம்மையாரை விகிர்தேசுவரி யென்றெழுதிப்போயினர்.

திருமுருகன்பூண்டியில் அம்மையார் திருப்பெயர், பதிகத்தில் "முயங்குபூண்முலை மங்கையாளொடும் ...... எத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே" என்று கூறியிருப்பதையும், இங்குள்ளார் தங்கள் பெண்மக்களுக்கு 'முயங்காள்' என்று பேரிடுவதையும் அறியாமல், வேறு பெயர் கூறியிருப்பதும், திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுரர் என்பதற்கேற்பப் பாகம்பிரியாளம்மை யென்ற அம்பிகையின் திருப்பெயர் சிறு குழந்தைகளும் இப்பக்கத்தில் கூறுவதை யறியாமல் வேறு கூறியிருப்பதும் பொருந்தாக் கூற்றுக்களேயாம்.

ஊர்.

திருக்கோயிற்கு ஊழியம் செய்வோர்களிற் சிலர் மட்டும் வாழ்ந்து வருகிற சில வீடுகள் தாம் இவ்வூரில் இப்போதிருக்கின்றன. தேவாரத்தில்,

"வளங் கொள்மதில் மாளிகை கோபுரமும்
மணிமண்டப முமிவை மஞ்சு தன்னுள்
விளங்கும் மதிதோய் வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியே னையும் வேண்டுதியே."

என்று கூறியிருப்பதுபோல், இது பெரிய நகரமாயிருந்து அழிந்திருக்கிற தென்பது இவ்வூரைப் பார்க்கையிலேயே தெரியும்.

வரலாறு.

முற் கூறியபடி, வெஞ்சன் என்னும் ஒரு சிற்றரசன் இந் நாட்டை ஆண்டு வந்தானென்றும், அவன், தனக்குச் சமணர்களோடு நேர்ந்த ஒரு பெரும் போரை, விகிர்தேசப் பெருமான் றிருவருட்டுணை கொண்டு எளிதில் வென்று வாகை சூடினனென்றும் கூறுப. இவ்வரசன் வேட்டுவமரபினன். இதற்குச் சான்றாக இத்தலத்தைச் சூழவிருக்கும் ஊர்களில் வேடர்கள் செல்வாக்காக இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அன்றியும், பெருநிலக்கிழமை (சமீன்) பெற்ற செல்வரும் இம்மரபில் இன்றும் இச்சில்லாவில் இருக்கின்றனர். தேவாரத்திலும், "வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே" யென்று கூறியிருப்பதும் போற்றத்தக்கது.

இனிச் சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்து தமிழ்மறை பாடிச் சிவபிரானருளைப் பெற்றுச் சென்றனர் என்பது,

"ஆயிடைநீங்கி யருளினர் செல்வா
ரருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார்
தென்றிருக் கற்குடி மலையில்

என்னும் பெரிய புராணத்தாலும் அறியலாம். (எயர் கோ—92)

இனிப் பெரிய புராணத்துட் கூறப்படாது அவ்வத் தலங்களில் வழங்கிவரும் வாலாறுகள் போலவே இத்தலத்து வழங்கும் ஒரு வரலாறும் உண்டு. அது,

சுந்தர மூர்த்தி நாயனர் இத்தலத்துக்கு வருவதையறிந்து தலத்து அடியார்களும், சிவநேசச் செல்வர்களும் எதிர்கொண்டழைத்துச்சென்று பல்வகை வழிபாடுகளும் செய்ய, மகிழ்ந்த நாயனர், அவர்களோடு திருக்கோயில் புகுந்து முறைமையின் வணங்கிப் பண்ணேர் மொழியாளையோர் பங்குடைய விகிர்தேசப் பெருமானைப் பாடுவாராய் ஒவ்வொரு பாட்டிறுதியையும் "வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே" என்று முடித்துத் திருக்கடைக்காப்பும் சாத்தியருளப், பாடுவார் பாடும் பரிசில்வரிசை யெல்லாம் அறியவல்லாராகிய சிவபெருமான், நாயனர் தமது தோழராதலின் அவரோடு தாம் புரியும் ஒரு திருவிளையாடலை யுட்கொண்டு, தம் திருக்குமாரர்களிருவரும், இருபார்ப்பனச் சிறுவர்களாய் உடன் வரத் தாமொரு முதிய பார்ப்பன வடிவங்கொண்டு, அவ்வாறே வந்த அம்மையாரோடும் நாயனர் முன்தோன்றி, "நல்லது, சுந்தரரே! உமது தமிழ்போல நமக்கின்பஞ்செய்வது வேறெதுவுமில்லை. இவ்வருந் தமிழுக்கு நன்கொடை யளிக்கவேண்டும். நாம் என்ன செய்வோம்? நம் கையில் ஒரு காசுக்கும் வழியில்லை. இத்தனை நாள் நாம் தேடி வைத்தவை யெல்லாம் இந்த இரண்டு (மக்கள்) செல்வத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. எனினும், இம்மக்களிருவரையும் ஈடு வைத்தேனும் எங்கேனும் பணம் கிடைக்குமானல் வாங்கித் தருவது தவிரேம். நீரும் வருக," என்றழைத்துக் கொண்டு, அவ்வூரில் தம்மை நாடோறும் போற்றி வழிபட்டுவரும் ஒரு கிழவியிடம் சென்று, 'அம்மையே! எனக்குக் கொஞ்சம் பொருள் வேண்டியிருக்கிறது. இந்த என்னருமைச் செல்வங்களாகிய இரு பிள்ளைகளையும் ஈடுவைத்துக் கொண்டு நான் கேட்கும் பொருள் தரவேண்டு' மென்றிரந்தனர். அக்கிழவியும் இக்குழந்தைகளின் அழகில் ஈடுபட்டு அவர் வேண்டிய பொன்னைக் கொடுக்க அதை நாயனருக்குக் கொடுத்தனுப்பினர் என்பதாம்.

இதனைக் கொங்குமண்டலசதகம் (10)

"கிழவே தியவடி வாகி விருத்தையைக் கிட்டியென்றன்
அழகாகு மக்க ளடகுகொண் டம்பொ னருடியென்றேற்
றெழுகாத லாற்றமிழ் பாடிய சுந்தரற் கீந்தவொரு
மழுவேந் தியவிகிர் தேசுரன் வாழ்கொங்கு மண்டலமே"
என்று கூறுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனரைத் தவிரத் திருநாவுக்கரசு நாயனரும் வந்து வணங்கிப் பதிகம் பாடியிருக்கின்றனர். பதிகமிப்போதில்லை. இதனை, வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகா வேதிசுரம் வீவீச்சுரம் என்னும் க்ஷேத்திரக்கோவைப் பதிகத்தால் அறியலாம். (8)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் இங்கு வந்து வணங்கிப் பதிகம்பாடி யிருக்கின்றனர். பதிகமிப்போதில்லை. இதனை,

"அண்டர்பிரா னுலயங்க ளம்மருங்குள் ளனபணிந்து [னிடை
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கி
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்க டொழுதணைந்தார்
கொண்டல்பணி நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்.
அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர் கோயில்
எப்பாலும் சென்றேத்தி" என்னும் பெரிய புராணத்தால்
(திருஞான 324, 327) அறியலாம்,

பூசை.

இக்கோயிலில் இரண்டு காலபூசை மட்டிலும் நாடோறும் நடந்து வருகிறது. அமாவாசை, பிரதோடம், மாதப் பிறப்பு ஆகிய இக்காலங்களில் கடவுள் விழாக் கொண்டருள்கிறார்.

கோயில் சிறிதாயிருந்தும், ஊழியம் செய்வோர் மிகச் சுருங்கிய வருவாயுடையோராயிருந்தும், இப்பக்கத்துப் பெரிய கோயில்களிலும் நடவாத ஆடல் பாடல்கள் நாடோறும் இராப் பூசையில் நடந்து வருகின்றன.

அது,

"மண்ணார் முழவும் குழலுமியம்ப் மடவார் நடமாடு மணி யரங்கில், விண்ணார் மதிதோய் வெஞ்சமாக்கூடல்." (4)

"அழகார், முழவாரொலி பாடலொடாடலறு, விழவார் மறுகில் வெஞ்சமாக்கூடல்" (6)

"பாடல் முழவுங் குழலுமியம்பப் பணைத்தோளியார் பாடலொடாடலறு, வேடர் விரும்பும் வெஞ்சமாக் கூடல்" (8)

என்று கூறும் நந்தம் சுந்தரமூர்த்தி நாயனாது திருமொழியின் சிறப்பென்று கொள்ளத்தகும்.

இவ்வளவு பெருமையும் பழமையுமுடைய திருக்கோயில் மிகவும் சிதைவுற்று இருக்கிறது. நன்னிலைமையிலுள்ள கோயிலை யெல்லாம் இடித்துப் புதுக்கும் வணிகமணிகள் இதனை யறியாதது தான் வியப்பாயிருக்கின்றது. இதன்கட் பல கல்வெட்டுக்களிருக்கின்றன.

சிறுவர்க்குரிய பக்கங்கள்.

உ

வாசுகியம்மையார்.

திருவாளர். L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

தொண்டை நாட்டிலே, காவேரிப்பாக்கம் என்னும் ஊரிலே, உழுவித்துண்ணும் வேளாளர் மரபிலே, ஆயிரம் ஏர்வைத்து உழு தொழில் நடத்திய மார்க்கசகாயர் என்ற ஒருவர் இருந்தார். அவரது அருமந்த மகள் வாசுகியம்மை. இவர் 'விளையும் பயிர்

முளையிலே தெரியும்' என்று கண்டவர் வியக்கும் மேன்மையும், நற்குண நற்செய்கையும் பெற்று, அழகின் கொழுந்து வளர்வது என வளர்ந்து, மணப்பருவம் சார்ந்தனர்.

இவர் செய்கை இவ்வாறாக இவரது தந்தை மார்க்கசகாயர் தமது விளைபுலங்களில் விதைத்த விதையெல்லாம் முளைத்துத் தழைத்துக் கருக்கொள்ளும் பொழுதில், கருகி அடியோடழிந்து பாழ்படக்கண்டு மனம்வருந்தி, பலவாறு முயன்றும் ஒன்றும் புலனாகாமையால், 'இக்குறையை நீக்கவல்லவர் யாராயிருப்பினும், அவர்க்கு என் மகள் வாசுகியம்மையை மணஞ்செய்து தருவேன்' என வாக்களித்திருந்தும், ஒருவரும் முன்வாராமையின், கவலையோடிருந்தனர். அப்பொழுது, உயிர்தரு மருந்துபோன்ற நண்பரொருவர் 'அன்பரே! மயிலாப்பூரில் ஒரு பெரியார் இருக்கின்றார். அவர் பெயர் திருவள்ளுவர்; தெய்வத்தன்மை வாய்ந்தவர்; அவர்பாற் செல்வீராயின் உமது கவலை நீங்கும்; எண்ணமும் கைகூடும்' என்றுரைத்தனர்.

அதனைக் கேட்டவுடனே, மார்க்கசகாயர் கார்பெற்ற பைங்கூழ் போல மனங்களிர்ப்பெய்தி, மயிலையை அடைந்து புலவரைத் தலைப்பட்டுக் கைகுவித்து நின்று, 'உலகம் உய்தற் பொருட்டாகத் தமிழ்மறை தந்த தண்ணளியாள! அடியேனது புலங்கள் விதைக்கினும் விளைவின்றிப் பாழ்படுகின்றன; ஏழைகள் யாவரும் பசியால் மெலிகின்றனர்; தேவரீர் கடைக்கணித்து, எளியேன் குறையை நீக்கியருளல் வேண்டும்' என்றிரந்தனர்.

நாயனாரும் அவரது வேண்டுகோட் கிணங்கி, காவேரிப் பாக்கம் சென்று, நிலங்களின் நிலைமைக்கிரங்கி அருள்ததும்பும் தமதுளத்தில், 'இப்புலம் முழுவதும் செழித்தோங்குக,' என நினைந்து கடைக்கணித்தருளினார்.

அன்று தொட்டு, அருளுரம் பெற்ற அந்நிலமெல்லாம் செழித்து விளைந்தன. எல்லோரும் பசிநீங்கி மகிழ்ந்தனர். இவற்றை எல்லாம் கண்டறிந்த மார்க்கசகாயர் இறும்பூதும் அடங்காமகிழ்ச்சியும் அடைந்து, வள்ளுவனாரை மயிலையிற்சென்று

வணங்கி, 'பெரியீர் செய்த பேருதவிக்குச் சிறியேனாற் செய்த் தகும் கைம்மாறு ஒன்றில்லை எனினும், அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு; என்னவெனிற் சொல்கின்றேன்; என் நிலம் காரணமாக எனக்குண்டாகிய குறையை நீக்கினோர்க்கு எனது அருமந்த மகள் வாசுகியை மணஞ்செய்து தருவதாக வாக்களித்தேன்; அச்சொல் பொய்யாகா வண்ணம் திருவுளம் பற்றவேண்டும்' எனத் தம் கருத்தை மிக்க வணக்கத்தோடு வெளியிட, நாயனாரும் மார்க்கசகாயரை நோக்கி, 'ஐய! உம்மகள் யாம் தரும் இம்மணலை அட்டுத்தந்திடின் அன்னவளை மணந்திடுவேம்;' எனக்கூறினர்.

மார்க்கசகாயர் அம்மணலைப் பெற்றுத் தம் மனைக்குச்சென்று தம் மகள் வாசுகியம்மையிடம் நாயனார் குறிப்புணர்த்தி மணலைக் கொடுப்ப, அவ்வம்மையார். 'ஐயர்பணி இதுவாயின் யான் இதனை அட்டிடுவேன்' என்றெண்ணித் தந்தையார் கையினின்றும் அதனை வாங்கி, உலையிற் பெய்து சோறாக அட்டுக்கொடுத்தனர். அதுகண்ட வள்ளுவனார், 'இந்நங்கை நம் சொல் மறாது நடக்க வல்லவளே' எனத்துணிந்து, வாசுகியாரை மணஞ்செய்து கொண்டனர்.

மணம் முடிந்த பின்னர், வாசுகியம்மை, தாய் தந்தையரிடம் விடை பெற்றுக் கணவரோடு திருமயிலையை அடைந்து, அங்கு ஊர்க்குப் புறம்பே தனியிடத்திலிருந்த அவரது சிறுகுடிலை அணுகிக் கணவனோடிருக்குமிடம் காடாயினும் கற்பகச்சோலை என நினைந்து, அவர்பால் அன்புடையவராய் அங்கு இனிதிருந்து, துறந்தார் வறியவர் விருந்தினர் முதலியோரைப் பேணி, அறத்தில் வழுவாமல் மனையறம் நடத்தி வந்தனர்.

செய்தொழிலிற் றீமையில்லாதது நெய்புந்தொழில் எனத் தெரிந்த தம் கணவர் வணிகரிடத்தில் நூல் வாங்கி, ஆடை நெய்து, அதனாற் பெறும் சிறு ஊதியத்தைக் கொண்டு வந்து கொடுப்பினும், நம் அம்மையார் பெற்றதைப் பெரிதாக நினைக்கும் பெற்றியாராதலால், அதனைப் போதுமென்றுவப்பார்.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை செய்தலும், வருவிருந்தினரைப் பரிவோடுண்பிக்கும் அன்பும் உடையவர்; கணவர் விரும்பி உண்ணுமாறு பல வகையான உண்டிகளை இனிதில் அடுதலில் வல்லவர்; தம் கொழுநனையல்லது பிறதெய்வங்களைக் கனவினும் தொழாத தன்மையர்; கணவர்க்குச் செய்யும் வழிபாட்டினைக் கடவுள் வழிபாட்டினும் சிறந்தது என்னுங் கருத்தினர்; ஆதலால் கணவர் துயிலுமளவும் கால்வருடித் துயின்றபின் உறங்கி, அவர் எழுவதன்முன் துயில் நீத்தெழுபவர்; திருமகளினும் மென்மையரெனினும், கற்பு நிலையிற் கலங்காத திண்மையர்; கணவர் யாதுரைப்பினும், மாறுரையாது செய்து முடிக்கும் கடப்பாட்டினர்.

இத்தகைய மேம்பாட்டினையுடைய வாசுகியார், நகமும் தசையும் போலக் கணவரோடிருந்து இல்லற நடத்திவருகையில், ஒருவர் போந்து, 'இல்லறமோ அன்றித் துறவறமோ எது சிறந்தது ?' என்று நாயனாரை வினவினர். அவர் அதற்கு விடையொன்றும் 'உரையாராய் இங்குச் சிலநாள் இருந்திடுக' என்றுரைத்திட, அவ்வாறே அவர் இருக்கின்ற காலத்து, ஒரு நாட் காலையில் தம் கணவருக்குப் பழஞ்சோறு படைத்துப் போய், அம்மையார் கிணற்றில் நீர் முகந்து கொண்டிருக்கையில், 'பெண்ணே! சோறு சுடுகின்றது; சிவிறி கொணர்ந்து சூடாற்றுக' என்றனர் ஐயர். வாசுகியார், இழுத்த குடத்தைக் கயிற்றோடு கிணற்றிலேயே விடுத்திட்டு விரையவந்து விசிறிகொண்டு வீசப் பழஞ்சோற்றில் ஆவியெழுந்தது. அதன் பிறகு சென்று, கீழே விழாமல் கிணற்றில் பற்றுக்கோடின்றி நின்றுகொண்டிருந்த நீர்க்குடத்தையும் கயிற்றையும் கொண்டு வருவாராயினர்.

பின்னொரு நாட் பகலில் நாயனார் என்றும் போல ஆடை நெய்து கொண்டிருக்கையில், அவர் கையிலிருந்த நெய்யுங்கருவியாகிய குழல் கீழே விழுந்து விட்டது. அப்பொழுது, 'குழல் கீழே விழுந்து விட்டது, பெண்ணே! விளக்கெடுத்து வருக' என்றழைத்தனர். வாசுகியம்மை, கணவர் சொற்கு மாறுரையாமல் நடப்பதே கடனாகக் கொண்டவராதலால், பகலென்று கரு

தாமல், விளக்கோடு வந்து குழலை எடுத்துத்தந்தனர். இவற்றை எல்லாம் கண்டிருந்த அயலூரிலிருந்து ஐயந்தெளிய வந்தவர் இவரது கற்பினை வியந்து, 'சொற்றவறுத இல்லாள் வாய்க்கின், இல்லறமே சிறந்தது ; இல்லையாயின் துறவறமே நன்று' எனத் தாமே உணர்ந்து, 'இம்மங்கையற்கரசியாரை இல்லாளாகப் பெற்ற இவரே பெரும் பேறு பெற்றவர்' எனப் புகழ்ந்து விடை பெற்றேகினர்.

இவ்வண்ணம், தம் கணவர் சொற்றிறம்பாதொழுகிப் புகழ் பட வாழ்கின்ற நாட்களில், ஒருநாள் இரவில், அம்மையார், நாயனுர்க்குரிய வழிபாடுகளைச் செய்துகொண்டிருக்கும்போது, 'அம்மே சோறிடுக' என்பார் ஒலி கேட்டது. தம் கணவருக்குப் பணிவிடை செய்வதினும் மேம்பட்ட நல்லறம் பிறிதில்லை என நன்கு உணர்ந்தவராதலால், வாய்பேசாது தம் பணிகளைச் செய்து முடித்த பின், சோற்றைக் கையிலேந்தி வெளியே வந்தனர். அங்கு நின்ற பெரியார்க்கு, இவரது தன்மை தெரியாது. ஆதலால், 'நெடுநேரமளவும் என்னைப் புறங்கடையில் நிற்கவைத்த இம்மங்கை என் ஆற்றலை அறிந்திலள் போலும்' எனச்சினந்து, இவர் முகத்தை எறப்பார்த்தனர். அவரது உள்ளக் கிடக்கையைக் குறிப்பாலுணர்ந்த அம்மையார், 'கொக்கென்று நினைத் தனையோ கொங்கணவா' என்று கூறினர். கேட்ட பெரியார் நடுக்கமுற்று, 'இது என்ன வியப்பாயிருக்கின்றது ? நெடுங்காலமாகக் காட்டிலிருந்து கடிய நோன்பியற்றுவேன் ; என்பெயர் கொங்கணன் என்பதை எவரும் அறிந்திடார் ; அதுவன்றி வரும் வழியில் என்மேல் எச்சமிட்ட கொக்கை எறெடுத்துப் பார்த்தேன், அது சாம்பராயிற்று. இவற்றை எல்லாம் என்னையன்றி அறிந்தவர் எவருமில்லை ; அவ்வாறிருக்க, இத்தனையும் இங்கிருந்தே தெரிந்துரைத்த இவ்வம்மையின் பெருமையை என் சொல்லுவேன் ! எவையும் தவத்திற்கு ஈடில்லை என்பர் ; அதுவும் இவ்வம்மையின் கற்பின்முன் நில்லாதாயிற்று ; இனி இவர் சினந்துரைக்கும் கொடுமொழிக் காளாகாது உய்யவேண்டும்' என்று துணிந்து 'தாயே என்குற்றத்தைப் பொறுத்தருள்க' என வணங்கிக் காடு சென்றனர்.

இவ்வாறு இல்லறமே நல்லறமென உலகம் உய்த்துணர வாழ்க்கை நடத்திய வாசுகியம்மைக்கு இறுதிக்காலம் கிட்டியது. உடம்பினின்று உயிர் பிரிவதற்குத் தத்தளிக்கையில், வள்ளுவனார், இவர் முகநோக்கினர்; யாதோ ஒன்றைக் கேட்டற்கஞ்சி வருந்துவதறிந்தனர், 'பெண்ணே! யாது சொல்ல விரும்புகின்றனை அஞ்சாமற் சொல்லுக' என்றனர்.

'என்னுயிர்த் துணைவரே! ஒன்று தெரியவிரும்புகின்றேன்; மன்னிக்க வேண்டும்; உண்கலத்தில் சோறு படைக்கும்போது, ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீரும், அதனருகில் ஊசி ஒன்றும் வைக்குமாறு என்னைப் பணித்தீர்கள். தேவரீர் ஒரு நாளாயினும் அவற்றை எடுத்தாளாமையால், அவற்றின் பயன் இன்னதெனத் தெரிந்திலேன்' எனக் கூறினர்.

'நங்கையே! சோறுப்டைக்கையில் சிதறி நிலத்தில் விழும் சோற்றினை ஊசியால் எடுத்து, நீரில் கழுவிக் கொள்வதற்காக வைக்கச் சொன்னேன். நிலத்தில் சோறு சிந்த நீ ஒருநாளும் படைத்திலை. அதனால், யான் அவற்றை எடுத்திலேன்' என்றுரைக்குமுன் வாசுகியம்மை, மலர்ந்த முகத்துடன் கைகுவித்துத் தம் கணவரை மனதில் நினைத்தவண்ணம் வீட்டுலகம் சென்றனர்.

இந்நில வுலகில், நங்கைமார்கள் தம்கணவர் சொற்றிறம்பாது நடத்தலாகிய கற்பினைக் கைக் கொள்வாராயின், இம்மையிற் புகழும், மறுமையில் வீட்டின்பமும் எய்துவர் என்பதை நடந்து காட்டுவதற்காக மண்ணிற்றோன்றிய இவ்வம்மையாரைப் போலக் கிடைப்பது அருமை என்பது தோன்ற, பொய்யில் புலவராகிய நாயனாரும்,

> 'அடிசிற் கினியாளே யன்புடை யாளைப்
> படிசொற் பழிநாணு வாளை—யடிவருடிப்
> பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தா
> லென்றூங்கு மென்க ணெனக்கு.'

என மனமுருகிப் பாராட்டினரென்றால், இவ்வாசுகியம்மையின் அருமை பெருமைகளைக் கேட்டு எவர் தாம் இன்புறாதவர்?

முற்றுப்பெற்றது.